


ஸ்ரீ

சை பெய வி சுவாமியார்

[illegible]

[illegible]

[illegible]



உ

கணபதிதுணை.

புதிதாய் அச்சிட்ட

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் செனித்து குறவர்க்கரசனாகிய நம்பிராசன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப்பருவங்கழித்து தக்க பருவதிசையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாதுகூறிச்சுப்மண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக்கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமணியரை காந்தர்வமணம்புரிந்துதினைகதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனை நினைந்துக் சோதித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ் செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பார்ஸீ, கெஜல், டோமரி, துக்கடா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா, ஓரடிப்பதம் முதலிய வர்ணமெட்டுகளினு லியற்றப்பெற்று நல்ல கிளேஸ் கடிதத்தில் ஆங்காங்கு ஐதீகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராகயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிறபடியாலும் வேண்டுவோர் எமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0 12 0

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

☞ பி. நா. சிதம்பரமுதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு,

மதராஸ்.

உ

கடவுள் துணை.

ஒருசொற்பலபொருட்பெயர்த்தொகுதியாகிய

பதினோராவது நிகண்டு.

மூலமும் - உரையும்.

——(*)——

காப்பு.

முடிவிலின்பத்துமூவா முதல்வனைப்போற்றிசெய்தே
அடிதொறுமிரண்டுமொன்று மாதியிற்பொருளடக்கு
நடைபெறுககரமாதி னகரவீறதுகையாகப்
படியிலோர்சொற்பொருட் பல்விதத்தொகைபகாலுற்றாம்.

முடிவில் அளவில்லாத, இன்பத்து இன்பத்தையுடைய, மூவா கெடாத, முதல்வனை அருக்கடவுளை, போற்றிசெய்து துதிசெய்து, அடிதொறும் அடிகடோறும், இரண்டு இரண்டுசொல்லிலும், ஒன்றும் ஒருசொல்லிலும், ஆதியில முதலில், பொருள் பொருள்களை, அடக்கி, அமைத்து, நடைபெறு நடைபெற்றுவரும், ககரமாதி ககரமாதி ககரவெதுகைமுதல், னகரவீறதுகையாக, னகரவெதுகையிறுதியாக, படியில் இவ்வுலகின்கண் ஓர்சொற்பொருட்பலவிதத்தொகை ஒருசொற்பலவகைபொருட்டொகுதியை, பகாலுற்றாம் சொல்லலுற்றாம்-எ-று.

விருத்தம்.

பகவனீசன்மாயோன் பங்கயன்சினனேபுத்தன்
பகலேநாளொருமுகூர்த்தம பகலவனடுவேதசு
மகரமேசுறாப்பூந்தாதாம வசிகூர்மை வசிபம்வாளே
யகமனமனையேபாவ மகலிடமுள்ளுமாமே

இ-ள். பகவனென்பது-சிவனுக்கும் திருமாலுக்கும் பிரமனுக்கும் அருகனுக்கும் புத்தனுக்கும்பெயர், பகலென்பது-நாள் ஒருமுகூர்த்தகாலம் சூரியன் நடு பிரகாசத்துக்கும்பெயர், மகரமென்பது, சுறாப்பூந்தாதுக்கும்பெயர், வசியென்பது, கூர்மை வசம் வாளுக்கும்பெயர், அகமென்பது, மனம்வீடுபாவம்இடம்உள்ளுக்கும்பெயர்-எ-று.

சிகரிகோபுரமேவெற்புச் சிறெலிநாரைநாற்பேர்
சிகழிகைமயிர்முடிபபேர் சிறந்தவாசிகைதேமாலை
சிகரமேமலையினுச்சி திரைசெனனிதவலைவெற்பா
மகம்யாகமோர்நாளென்ப மாய்வெனபமறைவுஞ்சாவும்

இ-ள். சிகரியென்பது-கோபுரம் மலை எலி நாரைக்கும்பெயர், சிகழிகையென்பது, மயிர்முடி கோத்தபூமாலைக்கும்பெயர், சிகரமென்ப

து-மலையினுச்சி அலை தலைநுனி மலைக்கும்பெயர், மகமென்பது-யாகம் ஓர்நட்சத்திரத்துக்குமபெயர், மாய்வென்பது-மறைவு சாவுக்குமபெயர்-எ-று. ௨

இகல்பகைவலிபோர்முப்பே ரிகுளையேதோழிநட்பாம்
புகரென்பமழைக்கோள்குற்றம் புற்கெனுநிறமுமுப்பேர்
நகமலையுகிர்மரப்பேர் நகைமகிழ்வொளிசிரிப்பாங்
ககனம்விண்படைகாடென்ப கடவுளேமுனிநன்மைப்பேர்.

இ-ள். இகலென்பது-பகைவலுமை யுத்தத்துக்கும்பெயர், இகுளையென்பது-தோழி சிநேகத்துக்குமபெயர், புகரென்பது-சுக்கிரன் குற்றம் கபிலநிறத்துக்குமபெயர், நகமென்பது-மலை நகம மரத்துக்கும்பெயர், நகையென்பது-மகிழ்ச்சிபிரகாசம் சிரிப்புக்குமபெயர், ககனமென்பது-ஆகாயம் சேனை காட்டுக்கும்பெயர், கடவுளென்பது-தெய்வம் முனிவன் நன்மைக்கும்பெயர்-எ-று. ௩

சாகஞ்சாகினிவெள்ளாடு தேக்கெனுங்கருவுமாமே
பாகலேகாரவல்லி பலாவென்றும்பகராலாமே
பூகமேகருங்குரங்கோ டப்பொருளுணர்தருக்கம்
நாகம்விண்குரங்குபுன்னை நற்றாசுமலைபாம்பியானை.

இ-ள். சாகமென்பது-சிறுகீரை வெள்ளாடு தேக்கமரம்தேனீக்கும்பெயர், பாகலென்பது-பாகல் பலாமரத்துக்கும்பெயர், பூகமென்பது-கருங்குரங்கு அப்பொருளறிகல் தருக்கத்துக்கும்பெயர், நாகமென்பது-ஆகாயம் குரங்கு புன்னைமரம நல்லாடை பாம்பு யானைக்கும்பெயர்-எ-று. ௪

திகிரியேமூங்கில்வட்டந் தேருருளாழிவெற்பாஞ்
சிகியெனபமஞ்சைதீயாந் தீதறுகேதுவும்பேர்
ஞெகிழியேசிலம்பினும நெருப்புறுகொள்ளிக்கும்பே
ரெகினமேபுளிமாஞாளி கவரிமாநீர்நாயன்னம.

இ-ள். திகிரியென்பது-மூங்கில் வட்டவடிவு தேர் தேருருளை சக்கராயுதம் மலைக்கும்பெயர், ஞெகிழியென்பது-சிலம்பு நெருப்புறுவிறகுக்குமபெயர், எகினமென்பது-புளிமாமரம்நாய் கவரிமான் நீர்நாய் அன்னப்புள்ளுக்குமபெயர்-எ-று. ௫

ஆகுவேயெலியினும மாமபெருச்சாளிக்கும்பேர்
யோகமேநியானங்கூட்ட முபாயமாமுயற்சிக்கும்பேர்
போகியிந்திரனபாம்பென்ப போகிபுட்பொதுப்பூமொட்டர்
கோகிலங்குயில்பல்லிப்பேர் குடங்கரேகுடிசைகும்பம்.

இ-ள். ஆகுவென்பது-பெருச்சாளிக்கும்பெயர், யோகமென்பது-நியானம் கூட்டம் உபாயம் உயர்ச்சிக்கும்பெயர், போகியென்பது-தேவேந்திரன் பாம்புக்கும்பெயர், போகிலமென்பது-பறவைப்பொது பூவரும்புக்குமபெயர், கோகிலமென்பது-குயில் பல்லிக்குமபெயர், குடங்கரென்பது-குடிசை குடத்துக்கும்பெயர்-எ-று. ௬

பொருட்டுதாமரைப்பூக்கொட்டை பொருப்புச்சேற்றெழுந்தகொம்பு
விருத்தலேசெகுத்தல்வீழ்த்த லிரித்தலோடழைத்தலீதல்
புகைக்கிநாமந்தூமம் போற்றும்யோசனைக்கும்பேரே
யசைத்தல்வேதனையொடித்த லறுத்திடலுயர்த்தலாமே.

இ-ள். பொருட்டென்பது-தாமரைக்கொட்டை மலைச்சேற்றிலெழுங்குமிழிக்கும்பெயர், இருத்தலென்பது-கொள்ளுதல் தள்ளுதல்சாய்த்தல் அழைத்தல்கொடுத்தலுக்குப்பெயர், புகையென்பது-புகையோசனை தூரத்துக்கும்பெயர், அசைத்தலென்பது-வருத்தம் முறித்தல் அறுத்தல் உயர்த்தலுக்கும்பெயர்-எ-று. ௭

சிக்கமேகுடிமிநாமஞ் சீப்புடனுறியுமேற்குங்
கொக்குமாமரமேசெந்நாய் குரண்டமேமூலநாளாம்
வக்கிரங்கொடுமைமீளன் மடங்குதலுடனேவட்டஞ்
சக்கிரிகுயவன்செக்கான் றராபதிநெடுமால்பாம்பு.

இ-ள். சிக்கமென்பது-குடிமி சீப்பு உறிக்கும்பெயர், கொக்கென்பது-மாமரம் செந்நாய் கொக்கு மூலநட்சத்திரத்துக்கும்பெயர், வக்கிரமென்பது-கொடுமை மீளுதல் மடக்குதல் வட்டத்துக்கும்பெயர், சக்கிரியென்பது-குயவன் செக்கான் அரசன் திருமால்பாம்புக்கும்பெயர்-எ-று. ௮

தூக்கெனப்பாடுங்கூத்துந் துலாமுமாராய்தலும்பேர்
பாக்கென்பதெதிர்காலத்தை பகரியைச்செற்றுவர்க்காய்
மேற்குமேற்றிசைமேலும்பேர் மெய்யுண்மையுடலும்மாமே
யூக்கமேவலியுற்சாக முள்ளத்தின்மிகுதிக்கும்பேர்.

இ-ள். தூக்கென்பது-செய்யுள் கூத்து நூறுபலம்ஆராய்தலுக்கும்ம்பெயர், பாக்கென்பது-எதிர்காலவிடைச்சொல் பாக்குக்கும்பெயர், மேக்கென்பது-மேற்றிசை மேலுக்கும்பெயர், மெய்யென்பது-நிசம் சரீரத்துக்கும்பெயர், ஊக்கமென்பது-வலிமை யுற்சாகம் உள்ளக்கிளர்ச்சிக்கும்பெயர்-எ-று. ௯

பகடியம்பெருமையேறு பஃறியாண்மேதியைம்பேர்
தகடிலையைமையென்ப தபனனேயிரவிதீயா
மகடென்பநடுவேகுக்கி யருளெனபகருணைசத்தி
மகரந்தங்கள்ளுந்தேனு மலர்த்தாதும்வழங்குமப்பேர்.

இ-ள். பகடென்பது-யானை பெருமை எருது ஓடம்எருமைக்கடாவுக்கும்பெயர், தகடென்பது-இலை அச்சுவடிவுக்கும்பெயர், தபனனென்பது-சூரியன்நெருப்புக்கும்பெயர், அகடென்பது-நடுவயிற்றுக்கும்பெயர், மகரந்தமெனபது-கள் தேன் பூந்தாதுக்கும்பெயர்-எ-று. ௰

சகுந்தம்புட்பொதுநீள்பூதஞ் சடையென்பவேணிவேராஞ்
சிகண்டியேபாலையாழின் றிறதிசைமயிலலிப்பேர்

சகுனிபுள்ணிமித்தம்பார்ப்போன் சமமென்பதமரோப்பாகுஞ்
சகுனமேகிழங்குபுள்ளின் சாதியுநிமித்தமுப்பேர்.

இ-ள் சகுந்தமென்பது-பறவைப்பொது கழுகுக்கும்பெயர், சடையென்பது-சடைவேருக்கும்பெயர், சிகண்டியென்பது-பாலையாழின்றிறத்தோரிசை மயிலடிக்கும்பெயர், சகுனியென்பது-பறவைசகுனம் பார்ப்பவனுக்கும்பெயர், சமமென்பது-யுத்தம் உவமைக்கும் பெயர் எ-று. கக

சக்கரம்பெருமையோர்புட் டாணியேபிறப்புவட்ட
மிக்கதேருருளையாழி வரையெனவிளம்புமென்பேர்
பக்கம்புட்சிறகுநட்பு பகர்திதியருகுமாகு
நக்கனையருகனசம்பு நிருவாணிநாட்டமுப்பேர்

இ-ள். சக்கரமென்பது-பெருமை ஓர்பறவை பூமி பிறப்புவட்டவடிவு தேருருளை கடல் மலைக்கும்பெயர், பக்கமென்பது-பறவையினிறகு சினேகம் பிரதமைமுதலியதிதி பக்கத்திற்கும்பெயர், நக்கனென்பது-அருகன் சிவன் திகம்பரனுக்கும்பெயர்-எ-று. கஉ

பூகமேதிரளைபூகம் புன்கணென்பதுநோய்துன்பம்
வாகுவேயழகுதோளா மாசியேமகமோர்மாதம்
பாகமேபிச்சைபங்காம் பயோதரம்புயலேகொங்கை
வாகைபண்பொழுக்கம்வெற்றி தனதொழில்வழங்கன்மிக்கால்.

இ-ள். பூகமென்பது-திரண்டவடிவு கமுகமரத்துக்கும்பெயர், புன்கணென்பது-வியாதி துன்பத்துக்கும்பெயர், வாகுவென்பது-அழகுபுயத்துக்கும்பெயர், மாசியென்பது-நட்சத்திரம் ஓர்மாதத்துக்கும்பெயர், பாகமென்பது-பிச்சை பங்குக்கும்பெயர், பயோதரமென்பது-மேகம் முலைக்கும்பெயர், வாகையென்பது-குணம்ஒழுக்கம்விசயம் தவம் வேலைசெய்தல் மிகுதிக்கும்பெயர்-எ-று. கங

நோக்கெனபதழகுபார்வை நுதலென்பபுருவம்நெற்றி
சேக்கையேமிருகந்துஞ்சு மிடமுலைசிறங்கபாயல்
பூக்கமேகமுகூரென்ப புலிங்கந்தீப்பொறியூர்புள்ளா
மாக்கமபூமகள்செல்வப்பே றால்கருமண்ணீராமே.

இ-ள். நோக்கென்பது-அழகு கண்ணுக்கும்பெயர், நுதலென்பது-புருவம் நெற்றிக்கும்பெயர், சேக்கையென்பது-விலங்கினபடுக்கையிடம் முலை, மாயனுக்கும்பெயர், பூக்கமென்பது-கமுகமரம் ஊருக்கும்பெயர், புலிங்கமென்பது-நெருப்புப்பொறி ஊர்க்குருவிக்கும்பெயர், ஆக்கமென்பது-இலக்குமி செல்வத்துக்கும்பெயர், அறலென்பது-கருமணல்நீருக்கும்பெயர்-எ-று. கச

சிகரங்கரங்கம்விசுங் கவரியுந்திவலையும்பேர்
சாகரந்துயிலொழித்தல் சமுத்திரமிருபேர்சாற்றுங்

காகுளியுதவிகண்டத் தெழுமொலியிசையிங்காட்டு
மீகைபொன்கொடையிண்டப்பே ரிரவியேமலையாதித்தன்.

இ-ள்: சிகரமென்பது-கரகம் சாமரம்-துளிக்கும்பெயர், சாகரமெ ன்பது-நித்திரையொழிப்பு கடலுக்கும்பெயர், காகுளியென்பது-ஆசனம், மிடற்றெழுமோசை இசைக்கும்பெயர், ஈகையென்பது-பொன் கொடுத்தல், இண்டக்கொடிக்கும்பெயர், இரவியென்பது-மலைசூரிய னுக்கும்பெயர்-எ-று. ௧௫

தகையென்பதழகுபண்பு தயையொடுபெருமைநாற்பே
ரகியென்பதரவிருப்பா மரிட்டமேகள்ளுக்காக்கை
ககமென்பதன்புபுள்ளாங் கடுத்தலொப்பையம்வேக
மகவல்பாமயிற்குரல்கூத் தந்தமேயழகியென்ப.

இ-ள். தகையென்பது-அழகு, குணம், அன்பு, பெருமைக்கும்பெ யர், அகியென்பது-பாம்பு இரும்புக்கும்பெயர், அரிட்டமென்பது- கள்ளுக்காக்கைக்கும்பெயர், ககமென்பது - அம்பு, பறவைக்கும்பெ யர், கடுத்தலென்பது-உவமை-சந்தேகம்-சீக்கிரத்துக்கும்பெயர், அக வலென்பது-ஓர்பாமயிலொலி, ஆடலுக்கும்பெயர், அந்தமென்பது- அழகுமுடிவுக்கும்பெயர்-எ-று. ௧௬

அக்கென்பவிடைமுரிப்பு மணிசங்குமணியுமாகு
நக்கலேநகையுண்டாற்பேர் ஞாட்பமர்பாரங்கூட்ட
மிக்கென்பகரும்புகள்ளா மீரமேகுளிர்ச்சியன்பு
மிக்கண்மானுடர்சிறார்பேர் வரைதலேகொள்ளநீக்கல்.

இ-ள். அக்கென்பது-இடபத்தின்முரிப்பு, சங்குமணிக்கும்பெயர், நக்கலென்பது-சிரிப்புபுசித்தலுக்கும்பெயர், ஞாட்பென்பது - யுத்தம் கனம் கூட்டத்துக்கும்பெயர், இக்கென்பது-கரும்பு கள்ளுக்கும்பெயர், ஈரமென்பது-குளிர்ச்சி அன்புக்கும்பெயர், மக்களென்பது- மனிதர் பிள்ளைகட்கும்பெயர், வரைதலென்பது-கொள்ளுதல் தள்ளுதலுக் கும்பெயர்-எ-று. ௧௭

கேகயமஞ்ஞையோர்கண் ணசுணமர்க்கிரமத்துமுப்பேர்
தோகையேமயில்வான்மஞ்ஞை விலங்கின்வால்சொல்லுமுப்பேர்
போகமேவினைவுசெல்வம் போகத்தின்விகாப்தமாகும்
போகுதனெடுமைநேர்மை போகுதலெனுமுப்பேரே.

இ-ள். கேகயமென்பது-மயில்ஓர்பண் அசுணப்புள்ளுக்கும் பெய தோகையென்பது-மயில்-வால்-மயில், மிருகத்தின்வாலுக்கும்பெய போகுதலென்பது-நீளம் நேர்மை போதலுக்கும்பெயர்-எ-று. ௧௮

கைக்கிளையிசைவிகற்ப மொருதலைக்காமமுப்பேர்
சுக்கைதாரகைமாலைப்பேர் சூத்திரம்பொறிநூற்பா

வெக்கரேசொரிதலோடு குவிதலுமிருபேரென்ப
மொக்குளேமுமிழிபூவின் முகுளனமொழியலாமே.

இ-ள். கைக்கிளையென்பது-இராகத்தின்வேறுபாடொருதலைக்காமத்துக்கும்பெயர், சுக்கையென்பது- நட்சத்திரம்பூமாலைக்கும்பெயர், சூத்திரமென்பது-இயந்திரம் பஞ்சிநூல் இலக்கணற்சூத்திரத்துக்கும் பெயர், எக்கரென்பது-சொரிதல்குவிதலும்பெயர், மொக்குளென்பது, நீர்க்குமிழி பூவரும்புக்கும்பெயர்—எ-று. உகூ

ககரவெதுகை-முற்றிற்று.

ஙகரவெதுகை.

புங்கமேயுயர்ச்சியன்பு பொருமாம்பிற்குதைமுப்பேரே
திங்களமபுலிமாதப்பேர் சித்திரனேவன்றச்சன்
கங்கெனபவரம்பின்பக்கங் கருத்தினைபருந்துமாமே
தொங்கலேபீலிக்குஞ்சங் தூக்கொடுதொடுத்தமாலை.

இ-ள். புங்கமென்பது-உயரம் அம்பம் அம்புக்குதைக்கும் பெயர் திங்களென்பது-சந்திரம் மாதத்துக்கும்பெயர், சித்திரனென்பது-சித்திரக்காரன் தச்சனுக்கும்பெயர, கங்கென்பது-வரம்பின்பக்கம்கருத்தினை பருந்துக்கும்பெயர், தொங்கலென்பது-பீலிக்குஞ்சம் தூக்குத்தொடுத்தமாலைக்கும்பெயர்-எ-று. க

சங்கமேகணைக்காலோரென் சவைசங்குபுலவர்நெற்றி
பங்கென்பமுடைமையாகும் பாதியுஞ்சனியுமேற்குப்
வங்கமேதவெள்ளிநாவாய் வழுதலையியமயாமே
யங்கணஞ்சேறுமுற்றமாஞ்சலதாரைக்கும்பேர்.

இ-ள். சங்கமென்பது-கணைக்கால் ஓரிலக்கம்கூட்டம சங்குபுலவர் நெற்றிக்கும்பெயர், பங்கமென்பது-முடம்பாதி சனிக்கும்பெயர்; வங்கமென்பது-வெள்ளி மரக்கால் வழுதலையத்துக்கும்பெயர், அங்கணமென்பது-சேறு முன்றில் சலதாரைக்கும்பெயர்-எ-று. உ

ஞாங்கர்வேலபங்கமுன்பு டமலெனகாண்குமாகுக்
தூக்கமேலிருக்தல்யானை துயில்சாம்புதராசுதாழ்தல்
வாங்கலேவளைத்தலகொள்ளல் வெயென்பகூர்மைவைக்கோல்
வேங்கைபொன்புலிமரப்பேர் வீகேக்கம்பூட்சாவாம்.

இ-ள். ஞாங்கரென்பது-வேலாயுதம் பக்கம் முன்புமேலுக்தும்பெயர், தூங்கலென்பது-கூத்து யானை நித்திரை சோம்பல் தராசுதாழ்தலுக்கும்பெயர், வாங்கலென்பது வளைத்தல்கொள்ளுதலுக்கும்பெயர், வையென்பது-வயலுக்கும்பெயர், வேங்கையென்பது-பொன் புலி ஓர்மரத்துக்கும்பெயர், வீயென்பது-கேக்கம் மலர் பறவை சாவுக்கும்பெயர்-எ-று. ங

மங்குல்சாரிருள்விண்முப்பேர் மருந்தமுதொடுமருந்தாம்
பங்கியேபுறமயிர்க்கும் பகருமாண்பயிர்க்கும்பேரா
மங்கதம்பன்னகங்கோ ளணியுடன்வசைச்சொல்லாகும்
பங்கமேசேறுதூசு பழுதொடுபின்னமாமே.

இ-ள். மங்குலென்பது-மேகம் இருள் ஆகாயத்துக்கும்பெயர், மருந்தென்பது-அமுதம் மருந்துக்கும்பெயர், பங்கியென்பது-பிறமயிர் குடுமிக்கும்பெயர், அங்கதமென்பது-பாம்பு வாகுவலயம்வசைச்சொல்லுக்கும்பெயர், பங்கமென்பது-சேறு வஸ்திரம் குற்றம் வேறுபாட்டுக்கும்பெயர்-எ-று. ௪

அங்கமேயுடலுறுப்பென் பாரங்கட்டிலேப்பேர்
பிங்கலம்பொன்னும்பொன்னி னிறத்தையும்பேசலாகும்
பொங்கரேமரத்தின்கோடு பொருப்பரிலவுமுப்பேர்
பொங்கலேகொதித்தன்மிக்காம் பொச்சாபுமறதிதீதாம்.

இ-ள். அங்கமென்பது-உடல் அவயவம் எலும்பு வேதாங்கம்கட்டிலுக்கும்பெயர், பிங்கலமென்பது-பொன் பொன்னிறத்துக்கும்பெயர், பொங்கரென்பது-மரக்கொம்பு மலைஇலவமரத்துக்கும்பெயர், பொங்கலென்ப-பொங்குதல் மிகுதிக்கும்பெயர், பொச்சாப்பென்பது-மறதி பொல்லாங்குக்கும்பெயர்-எ-று. ௫

ஙகரவெதுகை-முற்றிற்று.

சகரவெதுகை.

பாசனமென்பசுற்றம் பாண்டமும்கலமும்பன்னு
வாசமேயிருப்பிடம்பூ மணம்புள்ளின்சிறகுதூசாம்
கோசமேமதிலுறுப்பாண் குறிமுட்டைமுறிபண்டாரம்
தேசிகன்வணிகன்தேசாந் தரியொடுகுருவுமாமே.

இ-ள். பாசனமென்பது-உறவுமாத்திரம் உண்கலத்துக்கும்பெயர், வாசமென்பது-இருப்பிடம் பூமணம் பறவையினிறகு வஸ்திரத்துக்கும்பெயர், கோசமென்பது-மதிலுறுப்பு ஆண்குறி முட்டை புத்தகம் பொக்கிஷத்துக்கும்பெயர், தேசிகமென்பது-செட்டிதேசாந்திரிகுருவுக்கும்பெயர்-எ-று. ௧

மூசன்மொய்த்திடல்சாவென்ப முடலையேதிரட்சியுண்டை
கீசகங்குரங்குமூங்கி லாங்கேழ்நிறமொளிபொப்பாகும்
வீசலேயெறிதலீவாம் வெம்மையுட்டினம்விருப்பங்
கேசரமகிழ்பூந்தாதாங் கிருட்டியேயரீற்றும்பன்றி.

இ-ள். மூசலென்பது-மொய்த்தல்சாவுக்கும்பெயர், முடலையென்பது-திரண்டவடிவு உருண்டவடிவுக்கும்பெயர், கீசகமென்பது-குரங்கு மூங்கிலுக்கும்பெயர், கேழென்பது-நிறம் பிரகாசம் ஒப்புக்கும்பெயர், வீசலென்பது-எறிதல்கொடுத்தலுக்கும்பெயர், வெம்மையென்பது-வெப்

பம் ஆசைக்கும்பெயர், கேசரமென்பது-மகிழமரம் பூந்தாதுக்கும்பெயர், கிருட்டியென்பது-தலையீற்றுப்பசு பன்றிக்கும்பெயர்-எ-று. உ

அசிபடைக்கலமேவாளே யவமதிச்சிரிப்புமுப்பேர்
நிசியிராமஞ்சள்பொன்னு நீர்புனல்குணம்பூராடம்
பிசியென்பபொய்யுஞ்சோறும் பேசரும்பொருளுமுப்பேர்
சுசிகோடைசுத்தர்தியாஞ் சுடர்விளக்கிரவியங்கி.

இ-ள். அசியென்பது-ஆயுதம்வாள் அவமதிச் சிரிப்புக்கும்பெயர், நிசியென்பது-இரவு மஞ்சள் பொன்னுக்கும்பெயர், நீரென்பது-சலம் பண்பு பூராடநட்சத்திரத்திற்கும்பெயர், பிசியென்பது-பொய்சோறு அரும்பொருளுக்கும்பெயர், சுடரென்பது-விளக்குசூரியன் நெருப்புக்கும்பெயர்-எ-று. ௩

ஆசென்பசிறைவுகுற்ற மற்பமெய்க்கவசநாற்பேர்
காசென்பகோழைகுற்றங் கதிர்விடுமணிமுப்பேரே
ஆசினிபலாவிசேட மரவுரிமரக்காழ்விண்ணும்
தேசிகமழகுகாந்தி திசைச்சொல்லோர்கூத்துச்செம்பொன்

இ-ள். ஆசென்பது-சீக்கிரம் குற்றம் சிறுமை மெய்கவசத்துக்கும்பெயர், காசென்பது-கோழை குற்றம் இரத்தினத்துக்கும்பெயர், ஆசினியென்பது-ஈரப்பலா மரவுரி மரவயிரம் ஆகாயத்துக்கும்பெயர், தேசிகமென்பது-அழகு ஒளி அவ்வவ்நாட்டுச்சொல் ஓர்கூத்துசெம்பொன்னுக்குமபெயர்-எ-று. ௪

பச்சையேமரகதந்தோல் பரிமளப்புதன்மால்புந்தி
கச்சையென்பதுதழும்பு கயிறுடுகவசமுப்பேர்
செச்சைமைவெட்சிதெய்வை திசையென்பதிசைசுணங்காம்
இச்சையேபொய்த்தலாகு மிடித்தலஞ்ஞானமுப்பேர்.

இ-ள். பச்சையென்பது-மரகதம் தோல்ஓர்வாசனப்புல் திருமால் புதனுக்கும்பெயர், கச்சையென்பது-உடற்றழும்பு கயிறுகவசத்துக்கும்பெயர், செச்சையென்பது-ஆடு வெட்சி சாந்தின் குழம்புக்கும்பெயர், திசையென்பது-திசை தேமலுக்கும்பெயர், இச்சையென்பது-பொய் தரித்திரம் அறிவில்லாமைக்கும்பெயர்-எ-று. ௫

பிச்சமாண்மயிரும்பீலிக் குடையும்வெண்குடையுமாகும்
கச்சம்யானைக்கழுத்திற் கயிறளவோடுமரக்கால்
எச்சமேகுறைவேயாகம் இபமென்பமரக்கோடியானை
அச்சமேயகத்தியம்மை யஞ்சலிமும்பேருமே.

இ-ள். பிச்சமென்பது-குடுமி பீலிக்குடைவெள்ளைக் குடைக்கும்பெயர், கச்சமென்பது-யானைக்கழுத்திற்கயிறு அளவுமரக்காலுக்கும்பெயர், எச்சமென்பது-குறைவு புத்திரன் யாசகத்துக்குமபெயர், இபமென்பது-மரக்கொம்பு யானைக்கும்பெயர், அச்சமென்பது-அகத்திமரம் அச்சவடிவு புயத்துக்கும்பெயர்-எ-று. ௬

ஆசையேதிசைபொன்னசைபாம் ஆகுலம்வருத்தமோசை
காசையேகாசாநாணம் காமர்தாமழகுகாதல்
பாசமேகயிறுகூளி பகழுசத்துமோமம்பாகும்
தூசென்பதாடையானைப் புரைசைதூசிப்படைப்பேர்.

இ-ள். ஆசையென்பது-திக்குபொன் இஷ்டத்துக்கும்பெயர், ஆகுலமென்பது-வருத்தம் சத்தத்துக்கும்பெயர், காமமென்பது-காசாஞ்செடி நாணற்புல்லுக்கும்பெயர், காமமென்பது-அழகுஆசைக்கும்பெயர், பாசமென்பது-கயிறு பிரகாசம் ஊசித்தொளை அம்புக்கும்பெயர், தூசென்பது-புடவையானைப்புரைசபடைமுனணிக்கும்பெயர்-எ-று

தாசியேபரணிகூளி தளியென்பதுளியேகோயில்
வேசரிகழுதைமேயகோவேறுவேசரியுமாகும்
ஆசுகம்பகழிகாற்றும் அந்தரியுமையேதுர்க்கை
கோசிகஞ்சாமவேதங் கூறுபட்டாடைக்கும்பேர்.

இ-ள் தாசியென்பது-பரணி நட்சத்திரம் அடியாளுக்கும்பெயர், தளியென்பது-துளி கோயிலுக்கும்பெயர், வேசரியென்பது-கழுதை கோவேறுகழுதைக்கும்பெயர், ஆசுகமென்பது-அம்பு காற்றுக்கும்பெயர், அந்தரியென்பது-பார்வதி துர்க்கைக்கும்பெயர், கோசிகமென்பது-சாமவேதம் பட்டுவஸ்திரத்துக்கும்பெயர்-எ-று. அ

பசிவேறசிவனுவாப் பாரதிவாணிவாணி
வசுவேயான்கன்றுபொன்னும் வசுக்களுந்தீயுநாற்பேர்
அசமூவாண்டுநெல்லாடம் அணைமென்பகரைமேயமெத்தை
சசியென்பகர்ப்பூரஞ்சந் திரனயிராணிமுப்பேர்

இ-ள். பசுவென்பது-இடபம் உயிர் பசுவுக்கும்பெயர், பாரதியென்பது-சரஸ்வதி வாணிக்கும்பெயர், வசுவென்பது-பசுவின்கன்றுபொன் தேவர்களிலோர்பிரிவாகிய அஷ்டவசுக்கள் நெருப்புக்கும்பெயர், அசமென்பது-மூன்றுவருடத்துநெல் ஆட்டுக்கும்பெயர், அணையென்பது-கரை மெத்தைக்கும்பெயர் சசியென்பது-கர்ப்பூரம் சந்திரன் இந்திராணிக்கும்பெயர்-எ-று. கூ

விசும்புபொன்னுலகுமேகம் விண்ணொடுதிசையுநாற்பேர்
தசும்புநற்குடமிடாவாம் சாத்தனேயருகனையன்
இசைபுகழ்கிளவிபாட்டாம் ஏங்கலேயொலியிரங்கல்
பிசுனனேகோளன்பொய்ய னலுலோபனும்பேசுமுப்பேர்.

இ-ள். விசும்பென்பது-தேவலோகம் மேகம் ஆகாயம் திசைக்கும்பெயர், தசும்பென்பது, குடம் மிடாவுக்குமபெயர், சாத்தனென்பது-அருகன் அரிகரபுத்திரனுக்கும்பெயர், இசையென்பது-புகழ்சொல்பாட்டுக்கும்பெயர், ஏங்கலென்பது-சத்தம் அழுதலுக்குமபெயர், பிசனனென்பது-கோளன் பொய்யன் உலுத்தனுக்குமபெயர்-எ-று. ய

வஞ்சிரஞ்சதுரக்கள்ளி வயிரமேகுலிசமுப்பேர்
நொச்சியேசிந்துவார மதில்சிற்றார் நுவலலாமே
தச்சனேசித்திரைப்பேர் தபதியென்றுனுமாகும்
உச்சிநண்பகலுச்சிப்பேர் உறுப்பவயவமுடம்பாம்.

இ-ள். வச்சிரமென்பது-சதுரக்கள்ளி-வைரம்-வச்சிராயுதத்துக்கும் பெயர், நொச்சியென்பது-நொச்சிச்செடி-மதில்-சிற்றாருக்கும்பெயர், தச்சமென்பது-சித்திரைநட்சத்திரம்- தச்சனுக்கும்பெயர், உச்சியென்பது-நடுப்பகல்-உச்சந்தலைக்கும்பெயர், உறுப்பென்பது-அவயம்-சரீரத்துக்கும்பெயர்-எ-று. ௧௧

பாசென்பபசுமைமூங்கில் பப்பென்பபரப்போடொப்பாம்
மாசென்பசிறுமைகுற்ற மழையழுக்கொடுநாற்பேரே
கேசம்பெண்மயிர்க்குமாண்பான் மயிருக்குங்குளத்தலாகும்
வாசியேகுழன்முன்னுண்மா வாசியென்னேவலுற்பேர்.

இ-ள். பாசமென்பது-பசுமைமூங்கிலுக்கும்பெயர், பப்பென்பது-பரப்பு ஒப்புக்கும்பெயர், மாசென்பது-அற்பம் குற்றம்மேகம் அழுக்குக்கும்பெயர், கேசமென்பது-கூந்தல்குடுமிக்குமபெயர், வாசியென்பது-பூசைக்குழல் அச்சுவினிநட்சத்திரம் குதிரைவாசிஎன்னேவலுக்கும்பெயர்-எ-று. ௧௨

மிசையென்பதுணவுமேடு மீமிசைச்சொல்லுமுப்பேர்
விசயமேவென்றிவெல்லம் வெங்கதிர்மண்டலப்பேர்
முதலியேயுடம்புதாழை மூந்தியவுராமனொந்தி
வசதிநல்லியமூர்வீடா வரணயன்பரமன்காந்தன்.

இ-ள். மிசையென்பது-உணவு மேடுமீமிசைச்சொல்லுக்கும்பெயர், விசயமென்பது-வெற்றிலை வெல்லம்சூரியமண்டலத்துக்கும்பெயர், முதலியென்பது-உடம்பு தாழைபலமேதவனை ஓந்திக்கும்பெயர், வசதியென்பது-நல்லிடம் ஊர் வீட்டுக்கும்பெயர், வரமென்பது-பிரமன்சிவன் தலைவனுக்கும்பெயர்-எ-று. ௧௩

சகரவெதுகை-முற்றிற்று.

ஞகரவெதுகை.

துஞ்சலேநிலைபேறுகுந் துயில்சோம்புசாவுமாகும்
பஞ்சரஞ்செருந்திகூடாம் பாதமேகழியர்நாய்க்கர்
கஞ்சமேதாளங்குல்லை கமலம்வெண்கலம்வட்டப்பம்
குஞ்சமீயோட்டிகாழி குறள்குன்றிகுறளைச்சொல்லே.

இ-ள். துஞ்சலென்பது-நிறைபெறுதல் நித்திரை சோம்பல் சாவுக்கும்பெயர், பஞ்சரமென்பது-செருந்திமரம்கூட்டுக்கும்பெயர், பாத

வென்பது, நெய்தநிலமாக்கள் செட்டிகட்கும்பெயர், சஞ்சமென்பது, தாளம் கஞ்சா தாமரை வெண்கலம் அப்பத்துக்கும்பெயர், குஞ்சர மென்பது, ஈயோட்டி நாழி குறுமைகுன்றிக்கொடி குறளைச்சொல் லுக்கும்பெயர்—எ-று. க

நெஞ்சென்பமனமார்பின்பேர் நிழல்செல்வங்குளிர்ச்சிசாயை
மஞ்சுபூண்வலிவனப்பு மழைபானைமுதுகிவ்வைந்தே
வஞ்சமேற்செல்வோரூர்பா வல்லிமென்மருங்குற்பெண்ணும்
தஞ்சமேயெளிமையென்ப தருபற்றுக்கோடுமாமே.

இ-ள். நெஞ்சமென்பது - மனம் மார்புக்கும்பெயர், நிழலென்பது- செல்வம் குளிர்ச்சி நிழலுக்கும்பெயர், மஞ்சென்பது-வலிமை அழகு மேகம் யானை முதுகுக்கும்பெயர், வஞ்சியென்பது - பகைவர்மேற்செ ல்லுதல் ஒரூர் ஓர்பா ஓர்கொடி இடை பெண்ணுக்கும்பெயர், தஞ்ச மென்பது-எளிமை பற்றுக்கோலுக்கும்பெயர்—எ-று. உ

அஞ்சனங்கறுப்புமைதிக் கானையிலோன்றுமுப்பேர்
மஞ்சரியேபூங்கொத்து மாலைசெந்தளிருமாகும்
அஞ்சலிவணங்கல்லாவற் பறவையுமாகுமென்ப
இஞ்சியேபுரமையிஞ்சி எறுழெனவலிகண்டாமே.

இ-ள். அஞ்சனமென்பது - கறுப்புமைமேற்றிசையானைக்கும் பெ யர், மஞ்சரியென்பது-பூங்கொத்து பூமாலைதளிருக்கும்பெயர், அஞ்ச லியென்பது - கும்பிடல் வாவற்பறவைக்கும்பெயர், இஞ்சியென்பது- மதில் இஞ்சிக்கும்பெயர், எறுழென்பது - வலிமை தண்டாயுதத்துக் கும்பெயர்—எ-று. ௩

கிஞ்சுகமுருக்குச்செம்மை கிருட்டினன்றன்மால்பார்த்தன்
கஞ்சனமேகண்ணாடி கரிக்குருவிக்கும்பேர
பஞ்சமேசிறுமையைந்தாம் பகழியம்பிகன்குதைப்பேர்
வஞ்சனைமாயைபொய்யாம் மாயன்மால்கருநிறத்தோன்.

இ-ள். கிஞ்சுகமென்பது - முருக்கமரம் சிவப்புக்கும்பெயர், கிருட் டியென்பது-கண்ணன் அருச்சுனனுக்கும்பெயர், கஞ்சனமென்பது- கண்ணாடி கரிக்குருவிக்கும்பெயர், பஞ்சமென்பது - சிறுவிலைக்காலம் ஐந்துக்கும்பெயர், பகழியென்பது-அம்பு அம்புகுதைக்கும்பெயர், வஞ் சனையெனபது-மாயை பொய்க்கும்பெயர், மாயனென்பது - திருமால் கருநிறத்தானுக்கும்பெயர்—எ-று. ச

குஞ்சியாண்மயிர்புட்பார்ப்புக் குன்றியின்முதன்முப்பேரே
மஞ்சமேகபடம்வாளாம் மாயும்வஞ்சனைபொய்யென்ப
கஞ்சனைகுறளன்வேதன் களங்கந்தானழுக்குக்குற்றம்
கஞ்சிகைசிவிகையாடை கட்டிடுதிரையுமாமே.

இ-ள். குஞ்சியென்பது - குடுமி பறவைக்கஞ்சிகுன்றிப்புகருக்கும் பெயர், வஞ்சமென்பது, கபடம்வாளாயுதத்துக்கும்பெயர், மாயமென்பது, வஞ்சனைபொய்க்கும்பெயர், கஞ்சனென்பது, குறியின்பிரமனுக்கும்பெயர், களங்கமென்பது, அழுககுகுற்றத்துக்கும்பெயர், கஞ்சிகையென்பது, தண்டிகைவஸ்திரம் திரைச்சீலைக்கும் பெயர்—எ-று.

ஞகரவெதுகை-முற்றிற்று.

டகரவெதுகை.

நடலைவஞ்சனைபொய்யென்ப நடுங்கியநடக்கமும்பேர்
மடல்பனையேடுபோல்வ மலரிதழோர்நூற்கும்பேர்
படர்நடைநினைப்புநோவாம் பகர்ந்திடில்வீரர்க்கும்பேர்
குடநகர்பசுவோர்கூத்துக் கும்பமேகரும்பின்கட்டி.

இ-ள். நடலையென்பது, கபடம்பொய் அசைவுக்கும்பெயர், மடலென்பது, பனையேடுபோல்வன பூவிதழ் ஓர்பிரபந்தத்துக்கும்பெயர், படரென்பது, வழிநினைப்புதுன்பம்படைவீரருக்கும்பெயர், குடமென்பது, பட்டணம்பசுஓர்கூத்துகுடம்வெல்லக்கட்டிக்கும்பேர்—எ-று

மாடமேயுழுந்தோடெல்லாம் மழையென்பகுளிர்ச்சிமேகம்
கூடன்மினமறைவுகொல்லன் சம்மட்டிகுவட்டினுச்சி
சேடனேசாதிபங்கன் செகந்தாங்குமணந்தனென்ப
கேடகம்பரிசைவேறோர் கேடிலார்பலகைமுப்பேர்.

இ-ள். மாடமென்பது, உளுந்து வீட்டுக்கும்பெயர், மழையென்பது, குளிர்ச்சி மேகத்துக்கும்பெயர், கூடமென்பது, வீடுமறைவுகொல்லன்சம்மட்டி மலையினுச்சிக்கும்பெயர், சேடனென்பது, ஓர்சாதியான் தோழன் பூமிதாங்குமனந்தனென்னும் பாம்புக்கும்பெயர், கேடகமென்பது, தோற்றபல்கை ஊர் கேடகத்துக்கும்பெயர்—எ-று. உ

இடங்கரேமுதலைதூத்தர் குடங்கரிமுத்தரென்ப
முடங்கலேமடங்கல்கதை மூங்கிலோர்யோலையைம்பேர்
படங்குமேற்கட்டியென்ப பகர்பொருங்கொடியுமாகும்
விடங்கமேற்கொடிகோடுங்கை மிதவையேதெப்பஞ்சோராம்.

இ-ள். இடங்கலென்பது, முதலைவிடர் குடத்துக்கும்பெயர், முடங்கலென்பது, மடக்குதல் தாழை மூங்கில்வியாலை ஓலைக்கும்பெயர், படங்கென்பது, மேற்சட்டிபெருங்கொடிக்கும்பெயர், விடங்கமென்பது, அழகு துகிற்கொடி கொடுங்கைக்கும்பெயர், மிதவையென்பது, தெப்பம் சோற்றுக்கும்பெயர்—எ-று. ௩

குடிஞைபுட்போதும்யாறுங் கூகையுமாகுமென்ப
தடிறயனுலக்கைருல்லுத் தண்டுமீன்றசையுடும்பாம்

கொடிவளையொருபலப்பேர் சூழ்ந்தகங்கணமுமாகும்
மடியடங்குதலேசோம்பு வயிறுநோய்புடவைதாழ.

இ-ள். குடிசையென்பது, பறவைப்பொது நதி கோட்டானுக்கும்பெயர், கடியென்பது, கலனி உலக்கை வில்லு தண்டாயுதம்மின்னல்தசை உடும்புக்கும்பெயர், தொடியென்பது, கைவளை ஒருபலம் கங்கணத்துக்கும் பெயர், மடியென்பது, அடங்குதல் சோம்பல் வயிறுவியாதி புடவை தாழைக்கும்பெயர்—எ-று. ௪

படிவமேவடிவநோன்பாம் பந்தமேகிளையுங்கட்டும்
வெடிபச்சம்பரிமளிக்கு மென்புகைவெளியுமுப்பேர்
துடியலேமழைகாலப்பே தூத்தூல்தூன்பற்றுக்கோடாம்
கொடிருபூசங்குதும்பாம் குரவையேகடலோர்கூத்து.

இ-ள். படிவமென்பது உருவம், நோன்புக்கும்பெயர், பந்தமென்பது, உறவு நாட்டுக்கும்பெயர், வெடியென்பது, பயம் நறும்புகைவெளிக்கும்பெயர், துடியென்பது, ஏலம் குறிஞ்சிப்பறை ஓர்காலத்துக்கும்பெயர், தூணென்பது, சுத்தம் தசை பற்றுக் கோட்டுக்கும்பெயர், கொடியென்பது, பூசநட்சத்திரம் கபோலத்துக்கும்பெயர், குரவையென்பது, கடம் ஓர்கூத்துக்கும்பெயர்—எ-று. ரு

கடிகைநாழிகையேதுண்டம் கதவிடுதாளமுப்பேர்
படிறுபொய்களவிரண்டாம் பகர்தலேவிற்றல்பேசல்
கடிகையோகுடமூச்சி கட்டியுமிட்டபேரே
இடியிடிப்பேரெனன்மா வேற்றிடுமுறுதிச்சொல்லே.

இ-ள். கடிகையென்பது, நாழிகை துணிக்கை கதவிடு தாளுக்கும்பெயர், படிறென்பது, பொய் களவுக்குப்பெயர், பகர்தலென்பது விற்றல் பேசலுக்கும்பெயர், தடிகையென்பது, கிரீடம் நடுச்சுவே நெற்றிச்சுட்டிக்கும்பெயர், இடியென்பது, இடி நென்மா உறுதிச்சொல்லுக்கும்பெயர்—எ-று. ௬

நாடிநாசிகைநரம்பாம்நந்தல்கேடுடனேயாக்கம்
பாடியேநகரேமுடு மாசறையாயரூர்பேர்
கோடிகந்துகில்பூந்தட்டாம் குடம்பையேமுன்டைகூடு
கோடியென்பதுமைதுசாங்குடுமியேவெற்றியுச்சி.

இ-ள். நாடியென்பது-மூக்குநரம்புக்கும்பெயர், நந்தலென்பது-கேடுஆக்கத்துக்கும்பெயர், பாடியென்பது, நகரம் நாடுமுணேமேற்சென்றோருமைவிடம் ஆயர்பாடிக்குப்பெயர், கோடைகையென்பது, வஸ்திரம்பூந்தட்டுக்கும்பெயர், குடம்பையென்பது, முட்டை கூட்டுக்கும்

பெயர், கோடிகையென்பது, ஓரெண் புதுமை வஸ்திரத்துக்கும்பெயர், குடுமியென்பது, மிரயம் உச்சிக்கும்பெயர்—எ-று. எ

விடுவின்மீன்கிடங்குநாவா யெட்டுங்கோலம்பிலீர்க்காம்
கடுவிடமுள்ளுத்தானே யரிதருகசப்புநாற்பேர்
படுமரக்கொலை யகள்ளுப் பரவுநீர்நிலைநன்மைப்பேர்
படுத்தேசொலியின்றுதல் பசரியண்டாதல்பூத்தல்.

இ-ள். உடுவென்பது, நட்சத்திரம் அகழி மரக்கலமோட்டுங்கோல் அம்பிநிற்கும்பெயர், கடுவென்பது, நஞ்சுமுள் கடுமரம் கசப்புக்கும் பெயர், படுவென்பது, மரக்குலைகள் குளம் நன்மைக்கும்பெயர், படுதலென்பது, சத்தம்இல்லாமை உண்டாதல் பூத்தலுக்கும்பெயர்-எ-று.

மாடுபொன்பக்கஞ்செல்வம் வைகல்வைகறைநாடங்கல்
சேடென்பபெருமைநன்மை திரட்சியேயழகுநாற்பேர்
பாடுடம்பெருமையோசை பட்டேபட்டாடைசிற்றூர்
ஈடென்பநெகிழ்வேயொப்ப வலியொடுபெருமையென்ப.

இ-ள். மாடென்பது, பொன்பக்கம்செல்வத்துக்கும்பெயர், வைகலென்பது, விடியற்காலம், நாள்தங்கலுக்கும்பெயர், சேடென்பது, பெருமை நன்மைதிரண்டவடிவு அழகுக்கும்பெயர், பாடென்பது, இடம்பெருமை ஒலிக்கும்பெயர், பட்டென்பது, பட்டுவஸ்திரம் சிற்றூருக்கும்பெயர், ஈடென்பது, நெகிழ்தல் ஒப்புவலிமை பெருமைக்கும்பெயர்-எ-று. கூ

மடையென்பமதகுசோறு மணிப்பணிக்கடைப்பட்டுப்பேர்
படைபடைக்கலங்கலப்பை படுக்கைபல்லணைமேதானை
இடைநடுவென்பபற்று மிடப்பெயர்நுசும்புமாமே
மடமறியாமைசத்திர மன்னியமுனிவாசப்பேர்.

இ-ள். மடையென்பது மதகு சோறு ஆபரணக்கடைப்பூட்டுக்கும்பெயர், படையென்பது, ஆயுதம்கலப்பை நித்திரை குதிரைச்சேணம் சேனைக்கும்பெயர், இடையென்பது, நடு இடம் இடைக்கும்பெயர் மடமென்பது, அறிவின்மை சத்திரம் முனிவரிருப்பிடத்துக்கும் பெயர்-எ-று. ௰

வாடையென்பதுநான்வீதி வடகாற்றுத்தானுமாமே
ஆடுமேழகம்வெற்றிப்பேர் அலங்கலுட்சுருங்கல்வைகல்
கோடைமேல்காற்றினோடு குதிரைவெண்காந்தளென்ப
ஓடைநீர்நிலைகிடங்கே யொளிமணிபட்டமுப்பேர்.

இ-ள். வாடையென்பது, தெரு வடகாற்றுக்கும் பெயர், ஆடென்பது, ஆடு வெற்றிக்கும் பெயர், அல்லலென்பது, நாள்ரு

றைதல் தங்கலுக்கும்பெயர், கோடையென்பது, மேலக்காற்று குதிரை வெண்காந்தலுக்கும்பெயர், ஓடையென்பது, தடாகம்அகழிநெற்றிப்பட்டத்துக்கும்பெயர்—எ-று. ௰௩

அடுப்பென்பபரணிநாளே யச்சுமேசுள்ளிமுப்பேர்
வடுச்செம்புதழும்புவண்டாம் மத்தகநெற்றிசன்னி
இடக்கரேமறைத்தவார்த்தைகும்பமுமென்பநூலோர்
கடைப்பிடிமறப்பிலாமை கருதியேதோற்றமாமே.

இ-ள். அடுப்பென்பது, பரணிநட்சத்திரம் பயம்அடுப்புக்கும்பெயர், வடுவென்பது, செப்புதழும்புவண்டுக்கும்பெயர், மத்தகமென்பது, நெற்றிதலைக்கும்பெயர், இடக்கரென்பது, மறைத்தசொல்குடத்துக்கும்பெயர், கடைப்பிடியென்பது, மறவாமை தோற்றத்துக்கும்பெயர்—எ-று. ௰௨

பட்டமேயோடைதூசு பதவிவாள்கவரிமாவாம்
பிட்டமேகர்மமாகும் புடவையுநிறைவுமப்பேர்
குட்டமேதொழுநோயாழங் குளமென்பபெயமுப்பாற்றே
வட்டமேபரிசைநீர்ச்சால் வலயங்கைம்மணிசூர்கோள்.

இ-ள். பட்டமென்பது, குளம் வஸ்திரம் பதவிவாள் கவரிமானுக்கும்பெயர், புட்டமென்பது, காக்கை சீலைநிறைவுக்கும்பெயர், குட்டமென்பது, குஷ்டவியாதி ஆழம் குளத்துக்கும்பெயர், வட்டமென்பது, கேடகம் நீர்ச்சால் வட்டவடிவு கைம்மணி சீலைபரிவேடத்துக்கும்பெயர்—எ-று. ௰௫

திட்டையேயுரலுமேடுந் திண்ணையுநண்ணுமுப்பேர்
தட்டைவேய்தினத்தாள்கிள்ளை தணக்கறுமேகாலமுண்டம்
கிட்டியேபதலையிற்றுவாங் கிருட்டியாந்தாளமுப்பேர்
கட்டளைநிறைகல்லொப்பே யிட்டிகையியற்றலாணி.

இ-ள். திட்டையென்பது, உரல்மேடு திண்ணைக்கும்பெயர் தட்டையென்பது, மூங்கில் தினைத்தாள் கிளிதடிகோல் மொட்டைக்கும்பெயர், கிட்டியென்பது, தலையிற்றுப்பசு பன்றிகைத்தாளத்துக்கும்பெயர், கட்டளையென்பது, நிறையரிகருவி உவமைசெங்கலியற்றுங்கருவி உரையறிகருவிக்கும்பெயர்—எ-று. ௰௪

நாட்டங்கண்ணோர்பணவாளா நாகுசங்கிளமைநங்கை
யோட்டமேலுதடேதோல்வி யுயிரென்பகாற்றேசீவன்
கோட்டங்கோணபடப்பைநாடுகோயிலெளவிமான்கொட்டில்
தோட்டியங்குசங்கபாடந் துணையென்பதளவுமொக்கும்

இ-ள். நாட்டமென்பது, கண் ஓர்பண்வாளாயுதத்துக்கும்பெயர், நாகென்பது, சங்கு இளமைநத்தைக்கும்பெயர், ஓட்டமென்பது, மேலுதடு தோற்றலுக்கும்பெயர், உயிரென்பது, காற்று சீவனுக்கும்பெயர், கோட்டமென்பது, கோணல் மருதநிலத்தூர் நாடுகோயில்அழி

க்காற்றுதொழுவத்துக்கும்பெயர், தோட்டியென்பது, யானைத்தோட்டி கதவுக்கும்பெயர், துணையென்பது, அளவுஒப்புக்கும்பெயர்-எ-று.

கரு தடமலைபெருமைகோணஞ் சரிகரைசகலம்வாவி
யடல்கொலைவலிபோகு மருத்தமேபொருள்பொன்பாதி
யுடல்பொருளாகுமென்ப வோங்கல்வெற்புயர்மூங்கில்
விடபமேயிடபராசி விடைமக்கொம்புமுப்பேர்.

இ-ள். தடமென்பது, மலை பெருமை வளைவு வழிகுளக்கரைஅகலம் குளத்துக்குப்பெயர், அடலென்பது, கொல்லுதல்வல்லமையுத்தத்துக்கும்பெயர், அருத்தமென்பது, சொற்பொருள்பொன்பாதிக்கும்பெயர், உடலென்பது, பொன்கூடலுக்கும்பெயர் எங்கலென்பது, மலை உயர்ச்சி மூங்கிலுக்கும்பெயர், விடபமென்பது, இடபராசி இடபம்மரக்கொம்புக்கும்பெயர்—எ-று. கசு

கடகமேசேனைவட்டங் கைவளைமதிற்பேரே
வடகந்தோளத்தவாளம் வலமென்பதிடமேவெற்றி
படுவிகள்விற்பாள்குண்டம் பரமென்பகவசமெய்யாம்
நொடிபிதிற்கிளவியாகும் நூனநிச்சயமேகுன்றல்.

இ-ள். கடகமென்பது, சேனைவட்டவடிவுகைவளைமதிலுக்கும்பெயர், வடகமென்பது, தோல்உல்லாசத்துக்கும்பெயர், வலமென்பது, இடம் வெற்றிக்கும்பெயர், எடுவியென்பது, கள்விற்பவள்வசனிக்கும்பெயர், பரமென்பது, கவசம் சரீரத்துக்கும்பெயர், படுவியென்பது, கள்விற்பயல் வசனிக்கும்பெயர், பரமெனபது, வசம் சரீயத்துக்கும்பெயர், கொடியென்பது, கைநொடிசொல்லுக்கும்பெயர், நூனமென்பது, நிச்சயம் குறைதலுக்கும்பெயர்—எ-று. கஎ

கடங்கயிர்வர்க்கதுப்புக் காண்சுரம்முடம்புநீதி
குடங்கடாமீமம்யானைக் குழாங்கடன்முழவைந்தேழாம்
மடங்கலேசனியேசிய மறலிநோயுகமூழித்தீ
படங்கரிமுகபடாநற் றுகில்பாம்பின்பணமுப்பேரே.

இ-ள். கடகமென்பது, கயிறுயானைக்கவுள்காடு அருநெறி சரீரம் நியாயம் குடம்யானை மதம்சுடலை யானைக்கூட்டமகடன் குடமுழாவுக்குப்பெயர், மடங்கலென்பது, இடி சிங்கம்இயமன் வியாதியுகம் வடவாமுகாக்கினிக்கும்பெயர், படமென்பது, யானைமுகபடம்வஸ்திரம் பாம்பின்படத்துக்கும்பெயர்—எ-று. கஅ

ஆணலெபெண்ணுண்கூடல வார்த்தைகூத்தாடல்வென்றி
பாடலஞ்சிவப்பிறேடு பாதிரிகுதிரைமுப்பேர்
கோடரங்குரங்குசாலை கொம்பொடுகுதிரையாகும்
ஆடவர்புருடர்நாம மாமிளையவர்க்கும்பேரே

இ-ள். ஆடலென்பது, பெண்ணுன்கூடல்வார்த்தைகூத்தாடல்வெற்றிக்கும்பெயர், பாடலென்பது, சிவப்புபாதிரிமரம்குதிரைக்கும்பெ

யர், தோடரமென்பது, குரங்கு சோலை மரக்கொம்பு குதிரைக்கும்பெயர், ஆடவரென்பது, ஆண்மக்கள் இளைஞருக்கும்பெயர்-எ-று.

கடிமணம்விரைவுகூர்மை காலர்பேய்விலக்கங்காப்பு
வடிவச்சம்வாசனையும் வரைவுவிம்மிதமேழாரும்
வடுகேயிந்தளராகப்பேர் மருதயாழ்த்திறனுமாமே
வடவையேகுதிரைப்பெட்டை யவாப்பிடிவடவைத்தீயாம்.

இ-ள். கடியென்பது, கலியாணம் சீக்கிரம் கூர்மை காலம் பிசாசம் விளக்கம் காவல் அல்குல் பயம் வாசனைசந்தேகம்நீக்க அதிசயத்துக்கும்பெயர், வடுகென்பது, இந்தளராகம் மருதயாழ்த்திறத்துக்கும்பெயர், வடவையென்பது, பெண்குதிரை பெண்யானைஊழியத்தீய்க்கும்பெயர்-எ-று. ௨௰

கோடுசங்கூதுகொம்பு மரக்கொம்புவிலங்கின்கொம்பு
நீடுசெய்வரம்புகுன்றின் முகடுநீர்க்கரையேழ்பாரம்
மோடுமேடுதரமாகும் முருவலேநகைத்தல்பல்லாம்
ஆடியேயோர்மாதங்கண் ணாடியுத்திராடமாமே.

இ-ள். கோடென்பது, சங்கு ஊதுகொம்பு மரக்கொம்பு மிருகத்தின்கொம்பு கழனிவரம்பு மலையினுச்சி நீர்க்[illegible]யர், மோடென்பது, மோடிவயிற்றுக்கும்பெயர், மு[illegible]லென்பது, சிரித்தல்பல்லுக்குமபெயர், ஆடியென்ப[illegible], ஓர்மாத[illegible]ணாடி உத்திராடநட்சத்திரத்துக்கும்பெயர்-எ-று. ௨௧

தட்டுத்தேர்நடுவுகுற்றந் [illegible]
செட்டிவாணிகன்செவ்வேளாம் செப்புரை[illegible]
மட்டென்பதெல்லைக்கல்லாம் மார்க்கமேசமயம்வீதி
பட்டிகையென்பதச்சுப் பக்[illegible]டனிரதமாமே.

இ-ள். தட்டென்பது, தேர்நடுவு குற்றம் கட்டு கேடகம் விக்கினத்துக்கும்பெயர், செட்டியென்பது, செட்டி முருகனுக்கும்பெயர், செப்பென்பது, சொல் கரண்டகத்துக்கும்பெயர், மட்டென்பது, எல்லைகல்லுக்கும்பெயர், மார்க்கமென்பது, சமயம் தெருவுக்கும்பெயர், பட்டிகையென்பது, மூலைக்கச்சு தெப்பம் அரைஞாணுக்கும்பெயர்-எ-று.

கடைமுடிவிடம்வாயிற்பேர் களேபரம்பிணமுடம்பாம்
உடைதுகில்செல்வமென்க உடுக்கைதண் ணுமைதுகிற்பேர்
அடையிலைகனமேயப்ப மடுத்தல்செல்வழியையும்போம்
நடைவழியொழுக்கஞ்செல்வம் நாமென்பகயிறனபாமே.

இ-ள். கடையென்பது, முடிவு இடம் வாயிலுக்கும்பெயர், களேபரமென்பது, பிரேதம் சரீரத்துக்கும்பெயர், உடையென்பது, வஸ்திரம்செல்வத்துக்கும்பெயர், உடுக்கையென்பது, உடுக்கை, வஸ்திரத்துக்கும்பெயர், அடையென்பது, இலை பாரம் அப்பம் அடுத்தல்வழிக்

கும்பெயர், நடையென்பது, வழி ஒழுக்கம் செல்வத்துக்கும்பெயர், நாரென்பது, கயிறு இஷ்டத்துக்கும்பெயர்-எ-று. உங

விடையெதிர்மொழியமேரும் விடுத்தலும்விளம்புமுப்பேர்
கிடைகிடையுவமைநேட்டி கீதமேயிசைவும்வண்டு
படியங்கவடிசோபானம் பகைகுணமுவமைபாராய்
குடிகுலம்புருவமூராம் கொடிவல்லிதுவசங்காக்கை.

இ-ள். விடையென்பது, எதிர்மொழி இடபம் அனுப்புகலுக்கும் பெயர், கிடையென்பது, கிடை உவன்மகடைக்கும்பெயர், கீதமென்பது, இராகம் வண்டுக்கும்பெயர், படியென்பது, குதிரை யங்கவடி கற்படி பகை பண்புஒப்புபூமிக்கும்பெயர், குடியென்பது, சாதியுருவம் ஊருக்கும்பெயர், கொடியென்பது, படர்கொடிகுதிர்கொடி காக்கைக்கும்பெயர்-எ-று. உச

நாட்டமேநடனங்கேடாம் நகரென்பமனையுமூரும்
தொட்டலென்பதுவேதண்ட றேண்டல்கைதிண்டன்முப்பேர்
தட்டலேதடைகிட்டற்பேர் தையொருமாதம்பூசம்
கட்டலென்பதுதடுத்தல் களைத்தல்பந்தித்தல்கள்ளல்.

இ-ள். நட்டமென்பது, கூத்து கேட்டுக்கும்பெயர், நகரென்பது, வீடு ஊருக்கும்பெயர், தொட்டமென்பது, உண்டல் தோண்டுதல் கையாற்றொடுதலுக்கும்பெயர், தட்டலென்பது, தடுத்தல் கிட்டுதலுக்கும்பெயர், தையென்பது, ஓர்மாதம் பூசநட்சத்திரத்துக்கும் பெயர், கட்டலென்பது, தடுத்தல் களைதல் கட்டல் திருடனுக்கும்பெயர்-எ-று. உரு

புட்கரநிறைவுபாண்ட முகந்தீர்த்தம்புனல்வான்சேனங்
கட்கம்பங்கயமேயானைக் கைந்நுனிகுருகீறைந்தாம்
வெட்சியென்பதுவேசெச்சை மிருகநிரைகவர்தலென்ப
பெட்பென்பபெருமையன்பாம் பிரசந்தேன்மநுவண்டாமே.

இ-ள். புட்கரமென்பது, நிறைவு பாண்டமுகம் தீர்த்தம் நீர் ஆகாயம் மருந்து வாளாயுதம் தாமரை யானைத்துதிக்கை நுனிகுருவெனுமோர்பறவைக்கும்பெயர், வெட்சியென்பது, வெட்சிபூஞ்செடிபகைஞர் பசு கூட்டத்தைக் கவர்தலுக்கும்பெயர், பெட்டென்பது, பெருமை இஷ்டத்துக்கும்பெயர், பிரசமென்பது, தேன் கள்வண்டுக்கும்பெயர்-எ-று. உசு

அடுதலேயட்டலென்ப வடாதலுங்கொலையுமுப்பேர்
கடிலமேநெருங்கலோடு கடைகுதிரையுமுப்பேர்
படலையேபடர்தன்மாலை பதலையேவாசிக்கோவை
இடுகுதோவரச்சுற்றின்பேர் பரிசைக்குங்கிளத்தலாமே.

இ-ள். அடுதலென்பது, தீயிற்பாகமாக்குதல் நெருக்கல் கொல்லுதலுக்கும்பெயர், சடலமென்பது, நெருங்கல் சடைகுதிரைக்கும் பெயர், படலையென்பது, பரந்தவடிவு பூமாலை வாயகன்றபறை குதிரை

னிமாலைக்கும்பெயர், கிடுகென்பது-தேரின்மரச்சுற்று தேடகத்துக்கும்பெயர்-எ-று. உஎ

படலிகைபீர்க்குவட்டம் பரந்தகைம்மணிபூந்தட்டாங்
கொடியனேகொடியன்கேதாம் குண்டாந்தாழ்வாண்மாவே
தொடுவெனம்மருதப்பூமி தொட்டங்கைதவமுப்பேரே
முடிமயிர்முடியேசென்னி மகுடமுமொழியலாமே.

இ-ள். படலிகையென்பது-பீர்க்கு வட்டவடிவு கைம்மணி பூந்தட்டுக்கும்பெயர், கொடியனென்பது-துன்மார்க்கன் கேதுவெனும்பாம்புக்கும்பெயர், குண்டமென்பது-ஆழம் தாழ்வு ஆண்குதிரைக்கும்பெயர், தொடுவென்பது-மருதநிலம்தோட்டம் வஞ்சகத்துக்கும்பெயர், முடியென்பது-மயிர்முடிதலை கிரீடத்துக்கும்பெயர்-எ-று. உஅ

ஆடகந்துவரைபெண்ணும் அஞரறிவிலரேதுக்கம்
கோடகமுடியுறுப்புங் குதிரையும்புதுமையும்பேர்
பீடிகையரவணம்பூந் தட்டொடுபீடமுப்பேர்
தோடுபூவிதழேபெண்ணை மடல்போல்வதொகுதிக்கும்பேர்.

இ-ள். ஆடகமென்பது-துவரை பொன்னுக்குப்பெயர், அஞரென்பது-அறிவிலார் துயரத்துக்கும்பெயர், கோடகமென்பது-முடியுறுப்பு குதிரை புதுமைக்கும்பெயர், பீடிகையென்பது-கடைவீதிபூந்தட்டுஆசனத்துக்கும்பெயர், தோடென்பது-பூவினிதழ் பனையோடுபோலவன் கூட்டத்துக்கும்பெயர்-எ-று.

அடரென்பநெருங்குதற்பே ரைம்மையின்வடிவுமாகும்
விடர்முனியிருப்புத்தூர்த்தர் தமர்வெற்பின்முழைகாடைம்பேர்
விடலையேதலைவன்பேரும் விறலோன்றன்பேருமாகும்
அடிசெண்டுவெளியாளாதி கவிதையின்பாதமாமே.

இ-ள். அடரென்பது-நெருங்குதல் அச்சவடிவுக்கும்பெயர், விடரென்பது-முனிவரிருப்பிடம் தூர்த்தர் வெடியுப்பு மளப்பிளப்புகாட்டுக்கும்பெயர், விடலையென்பது-பாலைநிலத்தலைவன் வெற்றியாளனுக்கும்பெயர், அடிவென்பது-குதிரை யாளி வீதி காலமுதல்பாட்டினடிக்கும்பெயர்-எ-று. ௩௰

டகரவெதுகை-முற்றிற்று.

ணகரவெதுகை.

புணர்வுதோய்ந்திட விசைப்பாம் பொழில்புவிபெருமைசோலை
உணர்வென்பதெளிவேயூட லொழிதலேயறிவுமாகும்
குணமென்பகயிறுபண்பு கும்பம்வின்னுணிநாற்பேர்
கணமுடுநோய்திரட்சி காலநுட்பம்பேய்வட்டம்.

இ-ள். புணர்வென்பது-கல்வி இசைப்புக்கும்பெயர், பொழிலென்பது, பூமிபெருமை சோலைக்கும்பெயர், உணர்வென்பது-தெளிவுஊட

லொழிதல் அறிவுக்கும்பெயர், குணமென்பது-கயிறு குணம்குடம்வி ன்னுணிக்கும்பெயர், கணமென்பது-நட்சத்திரம ஓர்நோய்க்கூட்டம் காலநுட்பம் பொய் வட்டவடிவுக்கும்பெயர்-எ-று. க

ஆணமேகுழம்போடன்பாம் அலநாஞ்சிலமைவுமாமே
ஓணமாயோனுளாறும் ஊதியமிலாபங்கல்வி
காணமேபரியின்செக்கோர் கண்ணல்பொற்காசுநாற்பேர்
கோணலேமாருபாடுங் கூனுமாம்வளைவுமாமே.

இ-ள். ஆணமென்பது-குழம்பு இஷ்டத்துக்கும்பெயர், அலமென் பது-கலப்பை அமையுமென் றலுக்கும்பெயர், ஏணமென்பது-திரு வோணநட்சத்திரம் நதிக்கும்பெயர், ஊதியமென்பது-ஆதாயம்வித் தைக்கும்பெயர், காணென்பது-குதிரையுணவு செக்கு ஓர்கட்பிராணி பொற்காசுக்கும்பெயர், கோணலென்பது-மாறுபாடு கூன்வளைவுக்கும் பெயர்-எ-று. உ

குணில்குறுந்தடிகடிப்பாங் குல்லையேதுலவுவெட்சி
மணிநவமணியேகண்டை வனப்பொடுகருமைநன்மை
துணிசோதிநாளேதுண்டம் துளிமழைத்துளிபெண்ணுமை
பிணிமுகமயில்புட்பேராம் புசிதநீரிறைச்சிவேம்பு.

இ-ள். குணிலென்பது-குறுந்தடி பறையடிக்குங்குறுந்தடிக்கும்பெ யர், குல்லையென்பது-துளசி வெட்சி பூஞ்செடிக்கும்பெயர், மணியெ ன்பது-நவமணி யானைமணி அழகு கறுப்புநன்மைக்கும்பெயர், துணி யென்பது-சோதிநட்சத்திரம் துண்டத்துக்கும்பெயர், துளியென்ப து-மழைத்துளி பெண்ணுமைக்கும்பெயர், பிணிமுகமென்பது-மயில் பறவைப்பொதுவுக்கும்பெயர், பிசிதமென்பது-நீர் இறைச்சி வேம்பு க்கும்பெயர்-எ-று. ங

நாணிலைச்செப்பேர்தானே கயிறென்றுநாட்டலாகும்
தோணியேகடைநாள்வங்கந் தொடுகணைதெப்பஞ்சோறும்
வாணியேயோர்கூத்தின்பேர் வாக்குநாமகளுமாமே
ஏணியேயுலகோடெல்லை யிறைவைமானெனறுஞ்சொல்லும்.

இ-ள். நாணென்பது-வெட்கம் கயிற்றிற்கும்பெயர், தோணியென் பது-இரேவதி நட்சத்திரம் மரக்கலம் அம்பு தெப்பம சோற்றுக்கும் பெயர், வாணியென்பது-ஓர்கூத்து சொல்சரஸ்வதிக்கும்பெயர், ஏணி யென்பது-உலகம் எல்லை மானுக்கும்பெயர்-எ-று. ச

திணைநிலங்குலமொழுக்கஞ் செவியென்பகாதுகேள்வி
பிணையாசைவிலங்கின்பெண்பேர் பிலவங்கங்குரங்குதோரை
கணையம்புதிரட்சியும்பேர் காட்சியேகாடுங்கூடும்
பணைவயல்பரியின்பந்தி பருத்தல்வேயரசுபீடாம்.

இ-ள். திணையென்பது-பூமி சாதி நன்னிலைக்கும்பெயர், செவி யென்பது - காது கேள்விக்கும் பெயர், பிணை யென்பது - ஆசை

பெண் மிருகத்துக்கும்பெயர் பிலவங்கமென்பது குரங்கு தேமைக்கும் பெயர், கணையென்பது அம்புதிரண்டவடிவுக்கும்பெயர், கட்சியென் பது காடு பறவைக்கூட்டுக்கும்பெயர், பணையென்பது கழனிகுதிரை ப்பந்தி பருத்தல்-மூங்கில் அரசமரம் பெருமைக்கும்பெயர்-எ-று. ரு

யாணமேபுதுமைதச்ச ரெய்தியவுடம்புநன்மை
பாணந்தான்மேகவண்ணக் குறிஞ்சியெய்கணைபூம்பட்டாம்
சேணென்னதகலநீளஞ் செப்பிடிலுயரமுப்பேர்
ஆணைமெய்யுடனேவென்றி சூளேவலாகுநாற்பேர்.

இ-ள். யாணமென்பது புதுமை தச்சர் நன்மைக்கும்பெயர் பாண மென்பது மழைவண்ணக்குறுஞ்சி அம்புபட்டு வஸ்திரத்துக்கும் பெ யர், சேணென்பது அகலம் நீளம் உயரத்துக்கும்பெயர், ஆணையென் பது உண்மை வெற்றி சபதம் ஏவணிக்கும்பெயர்-எ-று. சு

அண்டமாகாயமுட்டை அயிலென்பவேலேகூர்மை
துண்டமேசாரைபாம்பு துணியொடுவதனமூக்காம்
கண்டமேகவசம்வெல்லங் கழுத்திடுதிரைவாடண்டம்
முண்டகந்தாழைகள்ளு முளரிமத்தகமுண்மூலம்.

இ-ள். அண்டமென்பது ஆகாயம் முட்டைக்கும்பெயர், அயிலெ ன்பது வேலாயுதம் கூர்மைக்கும்பெயர், துண்டமென்பது சாரைப் பாம்பு துண்டம் முகம் மூக்குக்கும்பெயர், கண்டகமென்பது கவசம் வெல்லம் கழுத்து திரைச்சீலை வாளாயுதம் தண்டத்துக்கும்பெயர், முண்டகமென்பது தாழைகள் தாமரை நெற்றி செடிக்கும்பெயர். எ

அண்டரேபகைவர்வானோ ராயரென்றுகுமுப்பேர்
சண்டனேசதையநாளுஞ் சூரனும்வேறுகட்டும்
கண்டல்கேதகைமுள்ளிப்பேர் கரைதலேவிளித்தலோசை
பண்டம்பொன்பணிகாரப்பேர் பாகுபால்குழம்புபாக்காம்.

இ-ள். அண்டமென்பது பகைஞர் தேவர் இடையருக்கும்பெயர், சண்டனென்பது சதயநட்சத்திரம் மூஞசூறுக்கும்பெயர், கண்ட லென்பது தாழை முள்ளிச்செடிக்கும்பெயர், கரைதலென்பது அ ழைத்தல் சத்தத்துக்கும்பெயர், பண்டமென்பது பொன் பலபண் டத்துக்கும்பெயர், பாகென்பது பங்கு குழம்பு பாம்புக்கும்பெயர். அ

விண்டென்பமாயோன்வெற்பு மேகமேமூங்கிற்காற்றும்
தொண்டென்பபழமையென்பா னொழும்பொடுவழிபாடாமே
தண்டென்பகுழாயேவீணை தடிப்படைமிதுனமோந்தி
வண்டென்பசங்குநற்றம் வளையளிவாளியைம்பேர்.

இ-ள். விண்டென்பது திருமால் மலைமேகம் மூங்கில் காற்றுக்கும் பெயர், தொண்டென்பது பழமை ஒன்பது அடிமை வழிபடுதலுக்

கும்பெயர், தண்டெண்பது துணையுடையபொருள் வீணைதடிசேனை மிதுனராசி ஒணுனுக்கும்பெயர், வண்டென்பது-சங்கு குற்றம்கைவளை வண்டு அம்புக்கும்பெயர்-எ-று. கூ

உண்டையேதிரளையாகு முறுபடைவகுப்புமென்ப
தொண்டையேதொண்டைகொவ்வை தூங்கும்யானைத்துதிக்கை
கொண்டையேமயிர்முடிக்கு மிலந்தையின்கனிக்குங்கூற்றும்
கண்டிகைபதக்கம்வாகு வலயமேகலன்பேய்செப்பு.

இ-ள். உண்டையென்பது-திரண்டவடிவு படைவகுப்புக்கும்பெயர், தொண்டையென்பது-ஆதொண்டைச்செடி கோவைக்கொடியானைத் துதிக்கைக்கும்பெயர், கொண்டையென்பது-மயிர்முடி இலந்தைப்பழத்துக்கும்பெயர், கண்டிகையென்பது-பதக்கம் தோணி ஆபரணச் செப்புக்கும்பெயர்-எ-று. ய

தண்ணமோர்கட்பறைப்பேர் தறித்திடமழுவுமாகும்
வண்ணமோர்சந்தம்பண்பாம் மறையிராசியமேவேதம்
பண்ணெனப்பாட்டும்பண்ணும் பரிமாவின்கலனையும்பேர்
மண்புவியொப்பனைப்பேர் முழவின்மார்ச்சனையுமாமே.

இ-ள். தண்ணமென்பது-ஒருகட்பறை பாசாயுதத்துக்கும்பெயர், வண்ணமென்பது-அழகுநிறம் குணத்துக்கும்பெயர், மறையென்பது-மறைவு வேதத்துக்கும்பெயர், பண்ணென்பது-இசைப்பாட்டுமண்கு திரைசேணத்துக்கும்பெயர், மண்ணென்பது-அணு அலங்காரம் மத்தளத்திற்பூசுமண்ணுக்கும்பெயர்-எ-று. கக

அணங்குநோயழகுசெல்வ மாசைபெண்கொலைவருத்தம்
துணங்கையேவிழாப்பேய்கூத்தர் மாதிரைநாளுஞ்சொல்லும்
குணங்கர்தோற்கருவிமாக்கள் குயிலுவரிருளர்முப்பேர்
துலங்காவிழிள்விழாவாம் தோன்றலேசுதனுதன்பேர்.

இ-ள். அணங்கென்பது-வியாதி அழகுதெய்வம்ஆசை பெண்கொல்லுதல் பிரயாசத்துக்கும்பெயர், துணங்கையென்பது-திருவிழாபேய்கூத்து திருவாதிரைநட்சத்திரத்துக்குமபெயர், குணுங்கரென்பது-தோற்கருவியாளர் நாம்பிநாயகருக்குரியோர் சண்டாளருக்கும்பெயர், துணங்காலென்பது-இருள் திருவிழாவுக்கும்பெயர், தோன்றலென்பது-மகன் அரசனுக்கும் பெயர்-எ-று. கஉ

புணரியேவாரிநீரிற் பொருதிரைகரைமுப்பேராம்
பணிலமேசலஞ்சலஞ்சங் கிருபெயர்பகறலாமே
கணிவேங்கைமரமதாகுங் கழணிசூழ்மருதமும்பேர்
பணியேதோற்கருவிவார்த்தை பாம்புசெய்தொழிலுமாமே.

இ-ள். புணரியென்பது-கடல் அலைகரைக்கும்பெயர், பணிலமென்பது வலம்புரியாயிரஞ்சூழ்ந்த சங்குக்கும்பெயர், கணியென்பது வேங்கைமரம் மருதநிலத்துக்கும்பெயர், பணியென்பது தோற்கருவி சொல்பாம்பு தொழிலுக்கும்பெயர்—எ-று. கங

பாணியூர்நீர்க்கையோசை பற்றிக்கான்போது நாடு
சேணுறுசோலைபண்டஞ் சிறக்குபல்வியம்பன்னேனன்றாகும்
தாணுச்சிவசயிலங்குற்று சங்கமலிநிலைதூணைம்பேர்
வேணியேசடைவிசும்பாம் வியாளமேபுவியும்பாம்பும்.

இ-ள். பாணியென்பது, ஊர் நீர் கை சத்தம் பற்று காடு காலம்நாடுசோலை பலபண்டம் வாச்சியப் பொதுவுக்கும்பெயர், தாணுவென்பது, மலை சுற்றி சிவன் நிலைபெருதல் தூணுக்கும்பெயர், வேணியென்பது, மயிர்ச்சடை ஆகாயத்துக்கும்பெயர்-எ-று. கச

குண்டலங்குழைவிசும்பாம் குபேரனே கனதன்சோமன்
மண்டலப்பரியூர்வட்டம் மந்தியேயூசம்வண்டு
கொண்டலேமுகில்கீழ்காற்றும் கோட்டியேவாயில்கூட்டம்
மண்டலிபூணைபாம்பு மண்ணொடுநாயுமாமே.

இ-ள். குண்டலமென்பது, குண்டம் ஆகாயத்துக்கும்பெயர்குபேரனென்பது, குபேரன்சந்திரனுக்கும்பெயர், மண்டலமென்பது,குதிரை ஊர்வட்டத்துக்கும்பெயர், மந்தியென்பது-பெண்குரங்குவண்டுக்கும்பெயர், கொண்டலென்பது-மேகங்கீழ்காற்றுக்கும்பெயர், கோட்டியென்பது - வாயில்கூட்டத்துக்கும்பெயர், மண்டலியென்பது-பூனை பாம்பு பூமி நாய்க்கும்பெயர்-எ-று. கரு

புண்டரீகந்திக்கானை புலிவண்டுகழுகுசஞ்சம்
தண்டமேயானைசெல்லும் வழிதண்டாயுதங்குடைக்கால்
பிண்டிநென்மாவசோகம் பிதாச்சிவன்பிரமநாரை
கண்டகஞ்சரிகைமுள்வாள் களவென்பகளாச்சோரப்பேர்.

இ-ள். புண்டரீகமென்பது-தென்கிழ்த்திசையானை புலிவண்டுகழுகு தாமரைக்கும்பெயர், தண்டமென்பது-யானை செல்லும்வழி தண்டாயுதம் குடைக்காம்புக்கும் பெயர், பிண்டியென்பது-நென்மா அசோகமரத்துக்கும் பெயர், பிதாவென்பது-சிவன்பிரமன்நாரைக்கும் பெயர், கண்டகமென்பது-உடைவாள்முள்ளாயுதத்துக்கும் பெயர், களவென்பது-களாச்செடி திருட்டுக்கும்பெயர்-எ-று. கசு

பண்ணவன்முனிவன்றேவன் பகர்குருவருகனாற்பேர்
தண்ணடைமருதஞ்சாரூர் நாடென்னும்பேர்சாற்றும்
வண்மையேவழங்கல்வாய்மை வளம்புகழ்வலிமையென்ப
ஒண்மையேமிகுதிநன்மை யொழுங்கறிவழகாம்பேரே.

இ-ள். பண்ணவனென்பது-முனிவன் தேவன் குரு அருகனுக்கும் பெயர், தண்ணடையென்பது-மருதநிலத்தூர் நாட்டுக்கும்பெயர், வண்மையென்பது-கொடுத்தல் உண்மைவளமை புகழ்வலிமைக்கும்பெயர், ஒண்மையென்பது-மிகுதி நன்மை ஒழுங்கு அறிவுஅழகுக்கும்பெயர் எ-று. கஎ

எண்ணெண்பதெள்ளிலக்க மெளிமைசோதிடம்விசாரம்
கண்ணிடங்கணுவேய்கண்ணும் காஞ்சிமேகலையோர்பண்ணும்
விண்முகில்சுவர்க்கம்வானம் விபுலம்பார்விரிவுபீடு
பண்ணையேவனீர்த்தாழ்வு மருதமாத்துயிலும்பாழி.

இ-ள். எண்ணெண்பது-இலக்கம் எளிமை சோதிடநூல் ஆலோசனைக்கும்பெயர், கண்ணெனபது-இடம்மரக்கணுமூங்கில் கண்ணுக்கும்பெயர், காஞ்சியென்பது-மாதரிடையணியுமேழுகோவை ஓர்பண்ணுக்கும்பெயர், விண்ணென்பது-மேகம் தேவலோகம் ஆகாயத்துக்கும்பெயர், விபுலமென்பது-பூமி அகல பெருமைக்கும்பெயர், பண்ணையென்பது-கழனி குளம் மருதநிலம் விலங்கின்படுக்கையிடத்துக்கும்பெயர்-எ-று. ௧௮

காண்டமேதிரைகாடம்பு கமண்டலங்கணைபெய்செப்பு
நீண்டகோன்முடிவுதூசு நீர்படைக்கலமீரைந்தாம்
பாண்டிலேறூர்திவட்டம் பணைகட்டில்விளக்குத்தாளம்
ஈண்டென்பதிவ்விடதோ டிப்படிகடியும்பேரே.

இ-ள். காண்டமென்பது-திரைச்சீலை காடு அம்பு கமண்டலம் ஆபரணம் வைக்குஞ்செப்பு கோல் முடிவு வஸ்திரம் நீர் ஆயுதத்துக்கும்பெயர், பாண்டிலென்பது-எருது வாகனம் வட்டவடிவுமூங்கில்கட்டில் விளக்கு தாளத்துக்கும்பெயர், ஈண்டென்பது-இவ்விடம் இவ்வண்ணம் சீக்கிரத்துக்கும்பெயர்-எ-று. ௧௯

அண்டசமுதலையோந்தி யரணைபுள்ளுடும்புபல்லி
நண்டுமீன்றவளையாமை நாமிகப்பியுமீராறும்
சண்டன்கூற்றலிளையோனுந் தாள்கதவுறுதாள்பாதஞ்
சுண்டையேசுண்டைகள்ளாஞ் சொர்க்கமேசுவர்க்கங்கொங்கை.

இ-ள். அண்டசமென்பது-முதலை ஓணான் அறணை பறவை உடும்பு பல்லி நண்டுமீன் தவளை ஆமை பாம்பு இப்பிக்கும்பெயர், சண்டனென்பது-இயமன்பேடி சூரியனுக்கும்பெயர், தாளென்பது-தாப்பாள்பாதத்துக்கும்பெயர், சுண்டையென்பது-சுண்டைச்செடிகளுக்கும்பெயர், சொர்க்கமென்பது-தேவலோகம் முலைக்கும்பெயர்-எ-று. ௨௰

பணமென்றரவின்பையும் பாம்புபொற்காசுமுப்பேர்
மணமென்பவாசங்கூட்டம் வதுவையுமாகுமென்ப
பணவையேபாணும்பேயும் பையுளேசிறுமைநோயாம்
நுணவையெண்ணேலைபிண்டி நுணியென்பநுணிநுண்மைப்பேர்.

இ-ள். பணமென்பது-பாம்பின்படம் பாம்புபொற்காசுக்கும்பெயர், மணமென்பது-வாசனை கூட்டம் கலியாணத்துக்கும்பெயர், பணவையென்ப[illegible] பிரகாசத்துக்கும்பெயர், பையுளென்பது-அற்பம்

வியாதிக்கும்பெயர், நுணவையென்பது-எண்ணெணேலைபாவுக்கும்பெயர், நுனியென்பது-கூர்மை நுட்பத்துக்கும்பெயர்-எ-று. ௨௧

ணகரவெதுகை-முற்றிற்று.

தகரவெதுகை.

மதலையேகொன்றைபிள்ளை மரக்கலங்கொடுங்கைதூணுஞ்
சிதலைநோய்துணிசெல்லெனப சீதநீர்குளிர்மேமேகம்
பதலையோர்கட்பறைப்பேர் பருவரைதாழிக்கும்பேர்
கதலிதேவாழைதேறு காற்றுடிதுவசநாற்பேர்.

இ-ள். மதலையென்பது-கொன்றைமரம் மகன் மரக்கலம் கொடுங்கை தூணுக்கும்பெயர், சிதலையென்பது-வியாதி சீலைத்துணி கறையானுக்கும்பெயர், சீதமென்பது-நீர் குளிர்ச்சி மேகத்துக்கும்பெயர், பதலையென்பது-ஒருகட்பறை மலை சாடிக்கும்பெயர், கதலியென்பது-வாழை தேற்றுமரம் காற்றாடி விருதுக்கொடிக்கும்பெயர்-எ-று. க

இதழ்பனையேடுபூவி னிதழுகடைனவிழ்முப்பேர்
கதழ்வுமேவகஞ்சிறப்பாங் களிசெருக்கொடுகுழம்பு
மதுமமேயிருப்பைவெட்டி மதுரமாநங்காவுமாமே
சிதடனந்தகன்மூடன்பேர் திதிபக்கநிலைபேறும்பேர்.

இ-ள். இதழென்பது-பனையேடு பூவிதழ் உதடுக்கும்பெயர், கதழ்வென்பது-சீக்கிரம் சிறப்புக்கும்பெயர், களியென்பது-களிப்பு குழம்புக்கும்பெயர், மதுமமென்பது-இருப்பைமரம் வெட்டிமரம் தித்திப்பு பொன்முதலிய வெழுவகைலோகத் தொன்றுக்கும்பெயர், சிதடனென்பது-குருடன் மூடனுக்கும்பெயர், திதியென்பது-பிரதமைமுதலிய திதி நிலைபெறுதலுக்கும்பெயர்—எ-று. உ

ஆதனுருயிரோர்வில்லான் அங்கியென்பது-தீச்சட்டை
போதகம்யானைக்கன்று போற்றியவிளமைக்கும்பெயர்
ஏதந்துன்பங்குற்றப்பேர் ஈமமேயாணங்காட்டஞ்
சூதன்றேர்ப்பாகன்சூதன் சுவேதமேவேர்வுவெண்மை.

இ-ள். ஆதனென்பது-உயிர் அறிவிலானுக்கும்பெயர், அங்கியென்பது-நெருப்பு சட்டைக்கும்பெயர், போதகமென்பது-யானைக்கன்று இளையதன்மைக்கும்பெயர், ஏதமென்பது-துன்பம் குற்றத்துக்கும்பெயர், ஈமமென்பது-சுடுகாடு விறகுக்கும்பெயர், சூதனென்பது-தேர்ப்பாகன் சூதாடுவோனுக்கும்பெயர், சுவேதமெனபது-வேர்வைவெண்மைக்கும்பெயர்-எ-று. ௩

சூதமாமரமேவண்டு சூதுடனிரதந்தோன்றல்
சூதகமேயாகுசந் தோகைமார்தோயாப்பூப்பாம்

பூதமாலிறந்தகாலம் புனிதமைம்பூதஞ்சீவன்
மாதவந்தவமைவசந்தம் வாதமேதாக்கங்காற்றும்.

இ-ள். ரூதமென்பது-மாமரம் வண்டு ரூது இரசம் பிறப்புக்கும் பெயர், ரூதகமெனபது-அசுத்தம் மகளிர் துடக்கும்பெயர், பூதமென்பது-ஆலமரம் இறந்தகாலஞ் சுத்தம் பிருதிவிமுதலியனவையும்பூதம் உயிருக்கும்பெயர், மாதவமென்பது-தவமா வசந்தகாலத்துக்கும் பெயர், வாதமென்பது-தருக்கம் காற்றுக்கும்பெயர்-எ-று. ௪

மதன்வலிவேள்வனப்பாம் வலித்தலேவளைத்தல்பேசல்
பதங்கம்புட்பொதாவிட்டிற்போ பலிபூசைபிச்சைநீறுஞ்
சிதம்விண்மீனஞானம்வெள்ளை செய்முறபட்டதாமே
நிதம்பமேயல்குலென்ப நெடுபக்கமுமமேபர்.

இ-ள், மதனென்பது-வலிமை மன்மதன் அழகுக்கும்பெயர், வலித்தலென்பது-வளைதல் பேசுதலுக்கும்பெயர், பலியென்பது-பூசை பிச்சை நீற்றுக்கும்பெயர், சிதமென்பது-நட்சத்திரம் ஞானம் வெண்மை கயமுறப்படுத்தலுக்கும்பெயர், நிதம்பமென்பது-அல்குல் மலைப்பக்கத்துக்கும்பெயர்-எ-று. ௫

சதியுரோகிணிகற்பாட்டி வஞ்சனைதாளவொற்று
விதியென்பவினையயன்பேர் வேட்டுவன்மகனுள்வேடன்
பதியிறைகேள்வாலூராம் பதுக்கையேபாறைதூது
பிதிற்கதைநொடிதூவற்பேர் பிண்டமேதிரளைபிச்சை,

இ-ள். சதியென்பது-உரோகிணிநட்சத்திரம் கற்புடைமகள் கபடம் தாளவொற்றுக்கும்பெயர், விதியென்பது - தொழில் பிரமனுக்கும்பெயர், வேட்டுவனென்பது-மகநட்சத்திரம் வேடனுக்கும்பெயர், பதியென்பது-அயன் நாயகன் ஊருக்கும்பெயர், பதுக்கையென்பது-பாறை சிறுதூறுக்கும்பெயர், பதரென்பது-கதைகைநொடி தூவலுக்குமபெயர், பிண்டமென்பது-திரட்சிபிச்சைக்கும்பெயர்.

ஆதியேமுதனேரோட லருகன்மாலீசன்வேதன்
பூதியம்புவியுடப்பேர் பொம்மலேபொலிவஞ்சோறு
பாதிரிபாடலப்பேர் பணைத்தெழுமூங்கிற்கும்பேர்
ஏதியாரிதம்வாளென்ப யிழைநூலாபரணமாமே.

இ-ள். ஆதியென்பது-முதல் நேரோடல் அருகன் திருமால் சிவன் பிரமனுக்கும்பெயர், பூதியமென்பது-பூமி சரீரத்துக்குமபெயர், பொம்மலென்பது-மங்கலம் சோற்றுக்குமபெயர், பாதிரியென்பது-பாதிரிமரம் மூங்கிலுக்கும்பெயர், ஏதியெனபது-ஆயுதம் வாளாயுதத்துக்கும் பெயர், இழையென்பது-நூல் ஆபரணத்துக்கும்பெயர்-எ-று. ௭

சாதியேபிரம்புகள்ளோர் தறுசிறுசண்பகப்பேர்
போதஞானந்தோணிற்பேர் புகல்குதிருடல்சொல்வெற்றி

ஓதிபெண்மயிரோபூனை யோந்திமெய்ஞ்ஞானம்வெற்பாம்
ஓதிமமன்னவெற்பாம் உறுத்தலேகோற்றல்கோபம்.

இ-ள். சாதியென்பது, பிறப்புகள் தேக்கமாம் சிறுசண்பகத்துக்கும்பெயர், போதமென்பது, ஞானம் மரச்சலத்துக்கும்பெயர், புகலென்பது, தாணிபகுதிர் சரீரம் சொல்மொற்றிக்கும்பெயர், ஓதியென்பது, கூந்தல் பூனை ஓணான் ஞானம் மலைக்கும்பெயர், ஓதிமமென்பது, அன்னபட்சி மலைக்கும்பெயர், உறுத்தலென்பது, முனைத்தல் கோபத்துக்கும்பெயர்—எ-று. அ

கதைமகள்வாவாத்தேனு சுண்ணச்சாந்தமுதுகாற்பேர்
புதையென்பகணையின்கட்டும் புதுமையுமறைவுமப்பேர்
மதுவென்பதறவுந்தேனும் வசந்தகால முமாமென்ப
கதைதண்டாயுதமேவார்த்தை காரணமிம்முப்பேரே.

இ-ள். கதையென்பது, மகள் உதைகாற்பசு சுண்ணச்சாந்து அமிர்தத்துக்கும்பெயர், புதையென்பது, அம்பின்கட்டு புதுமைமறைவுக்கும்பெயர், மதுவென்பது, கள் தேன் வசந்தகாலத்துக்கும்பெயர், கதையென்பது தண்டாயுதம்சொல்காரணத்துக்கும்பெயர்—எ-று.

சீதைபெண்பொன்னாங்காணி படைச்சால்சிராமன்தேவி
மேதைதோல்புளிதிரட்சி மிக்கபேறிவுகள்ளாம்
கோதைமுன்கைத்தோற் ட்டே குழலூர்காற்றெழுங்குசேரன்
ஓதைபேரொலிமதிற்பேர் உக்கந்தியிடையாமேனறு.

இ-ள், சீதையென்பது, பொன்னாங்காணி, உழுபடைச்சால் சீதாதேவிக்கும்பெயர், மேதையென்பது, தோல் புதன் இறைச்சிபேறிவு கள்ளுக்கும்பெயர், கோதையென்பது, முன்கைத்தோற்கட்டு பெண்மயிர் பூமாலை காற்று ஒழுங்கு சேரனுக்கும்பெயர், ஓதையென்பது, ஆரவாரம் மதிலுக்கும்பெயர், உக்கமென்பது, நெருப்பு இடை பசு எருதுக்கும்பெயர்—எ-று. ம

அத்தம்பொன்பாதிகைகண்ணாடிசொற்பொருள்காடோர்நாள்
புத்தகங்கோசமென்ப சித்திரப்படாமுமாமே
நக்துமேயிருளுமூறு வந்துடனிறவுநாற்பேர்
துத்தம்யாழிசைநாய்ப்பாலே வயிறுகண்மருந்துஞ்சொல்லும்.

இ-ள். அத்தமென்பது, பொன்பாதி கைகண்ணாடி சொற்பொருள் காடு ஓர்நட்சத்திரத்துக்கும்பெயர், புத்தகமென்பது, எழுத்தகம் எழுத்துச்சீலைக்கும்பெயர், நத்தமென்பது, இருள் ஊர் சங்கு இராத்திரிக்கும்பெயர், துத்தமென்பது, யாழிசை நரப்பு நாய்ப்பால்வயிறு கண்மருந்துக்கும்பெயர்—எ-று. மக

அத்தென்பவரைஞாண்செம்மை யசைச்சலோடிசைப்புநாற்பேர்
இ-ள். பீலியென்பது, ஆலவட்டம் பீலி மயில் மயிற்றோகைக்கும் பெயர், பலிசையென்பது, உதிவட்ட வடிவு பண்டை வளி முட்டிக்கு ம்பெயர், வேலியென்பது, ஊர் சூழ்ந்த காவலுக்கும்பெயர், மெத்தை யென்பது, தாளி சட்டைக்கும்பெயர், தோலென்பது, யானை வண்ண வகை வனப்பிலைநறுஞ்சொல் ஊதுந் துருத்தி தோலாற்செய்த கேட கத்துக்கும்பெயர்-எ-று. ௬

பாலேபெர்மாநிலத்தின் னிலத்திணிற்பாட லும்பேர்
வேலேக்கடலத்தோங்கின்ற யாழைச்சியர்காலம்
மாலேபெயரிரவாத்திமாலை யொழுங்குநாற்பேர்
சாலைபெருந்திணைப்பக்க மறப்புறந்தானுமாமே.

இ-ள். பாலையென்பது, ஓர்மரம் ஓர்நிலம் அந்நிலப் பாடலுக்கும் பெயர், வேலையென்பது, கடல் கரைநறை நீழ்காலத்திற்கும்பெயர் மாலையென்பது, இராத்திரி அந்திப்பொழுது மா ஒழுங்குக்கும்பெயர், சாலையென்பது, பெருந்திணைப்பகுதி அறத்தின்சாலைக்குமபெயர்-எ-று. ௭

அல்லிவெள்ளாம்பல்காய கனிதமாகமுப்பேர்
அல்லாமிருளெனப ஆகமார்புடனுமாமே
சில்லிபெவட்டங்கீரை தேருருள்சிலவீடென்ப
வல்லிபாய்ப் பாடிவள்ளி வறைவொடுநீகளமாமே.

இ-ள். அல்லியென்பது, வெள்ளாம்பல் காயாமரம் உள்ளிதழுக்கு ம்பெயர், அல்லென்பது, இரவு இருளுக்கும்பெயர், ஆகமென்பது, மார்பு உடம்புக்கும்பெயர், சில்லியென்பது, வட்டப்சிறுகீரை தேரு ருள் சில்லென்கிறதும்பெயர், வல்லியென்பது, இடைச்சேரி படர்கொ டி அளவுகோல் விலங்குக்குபெயர்—எ-று. ௮

இல்லைமனைவில்லையென்ற விராசிசவிடம்வீடாறே
மல்லையாமாலிவிறுதி மாயவனுடன்மூப்பேர்
சில்லியென்பதுபிண்ணை சின்னீதுதூர்த்தைக்கும்பே
ரெல்லையேபிரவன்றொல்லை எிப்புடன்சிறுபேர்தாமே.

இ-ள். இல்லென்பது, மனைவி இல்லையெனல் இராசி சாவு இடம்வீ ட்டுக்குப்பெயர், மல்லென்பது, வலிமை திருமால்கூத்திற்குமபெயர், சில்லையென்பது, பிரண்டை சின்னவன்றி தூர்த்தைக்கும்பெயர், எல்லை யென்பது, கல்லின் மூளைவளம் சிறுபொழுதுக்குபெயர்-எ-று. ௯

வில்லொளிபுறநாளாம் வெண்சிலைபொளியுமப்பே
வல்லவன்செவுருகை மலர்ச்சில்லொடு தீர்தமேறுன்றல்
புல்லரிபுவர்சபுண்மை புதல்லணையனுடனாளாம்
பொல்லலப்பசச்செளியல் கொலேயவல்வருத்தநாண்பேர்.

இ-ள். வில்லென்பது, மூலநட்சத்திரம்-வில்-பிரகாசத்துக்கும் பெ யர், வல்லென்பது-சன்னை சீக்கிரம் சூதாடு கருவிக்கும்பெயர், மல ர்த்தலென்பது, விரிதல் தோன்றலுக்கும்பெயர், புல்லென்பது,புலி ல்கள் அற்பபுல்லைமரம் அனுடநட்சத்திரத்திற்கும்பெயர், கொ

ல்லென்பது, அசைச்சொல் அனுமானம் சொல்லென்னேவல் துன்பத்திற்கும்பெயர்—எ-று. ௰

மால்புதன்பெருமைமேக மாயவன்மயக்கங்காறே
ஆலோடல்லிரண்டுஞ்சொல்லு மாலென்பதல்லவும்பேர்
வால்வெண்மைமிருதிதூ தாம் வசந்தமேதென்றல்காமன்
சால்புமாட்சிமைசான்றாண்மை சாற்றியவிருபேர்தானே.

இ-ள். மாலென்பது, புதன்பெருமை மேகம் திருமால்மயக்கம் காற்றுக்கும்பெயர், ஆலென்பது, அல்லென்பது, ஆலென்பதற்கும் அல்லவென்பதற்கும்பெயர், வாலென்பது, வெண்மைமிருதி சுத்தத்திற்கும்பெயர், வசந்தமென்பது, தென்றல் மன்மதனுக்கும்பெயர், சால்பென்பது, மாண்புடைமைக்கும்பெயர்-எ-று. ௰௧

வலம்புரிச்சங்குநந்தியா வர்த்தமோர்மாமுப்பேரே
புலம்படிதனிமையச்சம் பொய்யென்பபொக்கம்பொக்காம்
சிலம்பொலிசெறிகிண்கிணாஞ் செருந்திபஞ்சரம்வாட்கோரை
விலங்குகாற்றனே குறுக்கு மிருகத்தின்பொதுவுமாமே.

இ-ள். வலம்புரியென்பது, சங்கு, நந்தியாவட்டம் ஓர்மரத்திற்கும்பெயர், புலம்பென்பது, சத்தம் தனிமை பயத்திற்கு பெயர், பொய்யென்பது, அபத்தம்மரப்பொந்துக்கும்பெயர், சிலம்பென்பது, சத்தம் சிலம்பு மலைக்கும்பெயர், செருந்தியென்பது, செருந்திமரம் வாட்கோரைக்கும்பெயர், விலங்கென்பது, கால்விலங்கு குறுக்கு மிருகத்தின் பொதுவிற்கும்பெயர்-எ-று. ௰௨

வுலகமேதிசைவெண்பூமி யுயர்குணஞ்சனமுயர்ந்தோர்
அலவனேஞெண்டுபூனை யம்புலிக்கடகராசி
இயலமேகூத்தின்கூத்தின் விகற்பமுமிருபேரென்ப
வலவைவஞ்சப்பெண்வல்லோன் வருடைதான்சிம்புளாடாம்.

இ-ள். உலகமென்பது, திக்கு ஆகாயம் பூமி குணம் சனம் உயர்ந்தோருக்கும்பெயர், அலவனென்பது, நண்டு பூனை சந்திரன் கடகவிராசிக்கும்பெயர், இயலென்பது, கூத்து கூத்தின் வேறுபாட்டுக்கும்பெயர், வலவையென்பது, காளி ஏவற்பெண் வல்லவனுக்கும்பெயர், வருடையென்பது, எண்காற்புள் ஆட்டுக்கும்பெயர்-எ-று. ௰௩

காலமேமணிவடப்பே கலைமயிலிறகுமுப்பேர்
சிலீமுகமுலைக்கண்வண்டு சித்திரபுங்கந்தானும்
சலாகைநன்மணிநாராசஞ் சவளமுமாகுமென்ப
விலோதம்பெண்வயிர்ப்பதாகை விடமென்பநஞ்சுந்தேளும்

இ-ள். காலமென்பது, மணிவடம் பதினறுகோவை மணியுண்மாதரிடையணிமயிலிறகுக்கும்பெயர், சிலீமுகமென்பது, முலைக்கண்வண்டு அம்புக்கும்பெயர், சலாகையென்பது, நெய்வகமணி சலாகை ஈட்டிக்கும்பெயர், விலோதமென்பது, கூந்தல் பெருங்கொடிக்கும்பெயர், விடமென்பது, நஞ்சு தேளுக்கும்பெயர்-எ-று. ௰௪

செல்லிடியேவன் மேகஞ் சிதலையுமாகுமென்ப
எல்லொளி பகலிகழ்ச்சி யிரவுலனிதனியைம்பேர்
கல்லொலி மலைநல்லென்ப காரண்ட நீர்க்காக்கைசெப்பாம்
சொல்லுரைகீர்த்தி நெல்லாய் கொடுத்தலே வளைத்தல்பற்றல்.

இ-ள். செல்லென்பது, இடி செலவென்னேவல் மேகம் சிதலையானுக்கும்பெயர், எல்லென்பது, பிரகாசம் பகல் இகழ்ச்சி இராத்திரி சூரியனுக்கும்பெயர், சொல்லென்பது, வார்த்தை புகழ் நெல்லுக்கும்பெயர், கொடுத்தலென்பது, வளைத்தல் பற்றலுக்கும்பெயர், நல்லென்பது, சத்தம் மலை கல்லுக்கும்பெயர், காரண்டமென்பது, நீர்க்காக்கை செப்புக்கும்பெயர்-எ-று. ௰௫

கலிவஞ்சமொலியே வாரி கடையுமவ் வலியைப்பேரே
சிலையொலி மலைகல் வில்லாஞ் செடியொளி செறிவு தீதாம்
தலமென்பதிலைபூப்பேர் தலையிடஞ் சிரம்விண்ணாதி
திலமேவமஞ்சாடியெள்ளாந் திலகமஞ்சாடிபொட்டாம்.

இ-ள். கலியென்பது வஞ்சனை சத்தம் கடல்கடையும் வலிமைக்கும்பெயர், சிலையென்பது, சத்தம் மலை கல் வில்லுக்கும்பெயர், செடியென்பது, பிரகாசம் நெருக்கம் தீமைக்கும்பெயர், தலமென்பது, இலைபூமிக்கும்பெயர், தலையென்பது, இடம் சிரசு ஆகாயம் முதலுக்கும்பெயர், திலமென்பது, மஞ்சாடிமரம் எள்ளுக்கும்பெயர், திலகமென்பது, மஞ்சாடிமரம் திலகத்துக்கும்பெயர்—எ-று. ௰௬

வல்லகாண் விரைவுமைந்தாம் வடமணிவடமாரும்பு
பல்லமோர்க்கணக்குப்பாணம் பல்லணங்கடிநாற்பேர்
மல்லமேவவலிவளப்பேர் வாயிலைம்புலன்கபாடம்
முல்லைமல்லிகையேவெற்றி முல்லைநன்னிலங்கற்பாமே.

இ-ள். வல்லையென்பது, காடு காலவிரைவு வலிமைக்கும்பெயர், வடமென்பது, மணிவடம் ஆலமரம் கயிறுக்கும்பெயர், பல்லமென்பது, ஓரெண் அம்புகுதிரைக்கல்லணை கடிக்கும்பெயர், மல்லென்பது, வலிமைவளமைக்கும்பெயர், வாயிலென்பது, ஐம்புலன் கதவுக்கும்பெயர், முல்லையென்பது, வனமல்லிகை வெற்றி முல்லைநிலம் கற்புக்கும்பெயர்-எ-று. ௰௭

கோலென்பதீட்டிவட்கோ றுகிலினைதுலாசம்மட்டி
சீலமன்னவன்செங்கோ றிரட்டியாழ்நரம்பேயம்பு
நீலமஞ்சனக்கோலோடு நீளிலந்தையும்பன்னோர்பேர்
காலியருணன்பாம்பு கற்றெருமுப்பேராமே.

இ-ள். கோலென்பது, ஈட்டி வாட்கோல் எழுதுகோல் தராசு குதிரைச்சம்மட்டி செங்கோல் திரண்டவடிவு யாழ்நரம்பு பாணம் மையெழுதுகோல் இலந்தைமரத்துக்கும்பெயர், காலியென்பது சூரியன்றேர்ப்பாகன் பாம்பு காற்றுக்கும்பெயர்—எ-று. ௰௮

கூலமேபண்ணியாரம் புனக்கரைகோவிலங்கின்
வாலேபாயசம்மேபாகல வயபொடுநாங்கென்பேரே

காவிடமாக்கால்பிள்ளை குறுந்தரிவணங்காம்பூற்றங்
காலனகுறங்கால்வாய்க்கால் காற்றுத்தேருருள்பன்மூன்றே.

இ-ள். கூலமென்பது, பலபண்டம் நீர்க்கரை பசுமிருகத்தின்வால் கடைவீதி பாசல்சிறுவரம்புதூரத்துக்கும்பெயர், காலென்பது, இடம் மரக்கால் புத்திரன்குறுந்தரி காடுமலர்க்காம்பு பற்றுக்கோல் காலன் முளைபாதம் வாய்க்கால்காற்று தேருருளைக்கும்பெயர்-எ-று. ௰௯

கோலமேயழகுபன்றி பாக்குநீர்கொழுந்துபீர்க்காம்
மாலியேபுங்கிகள்ளாம் மாந்தலேவரித்தலுண்டல்
வேலியில்படைக்கலம்பேர் வேதண்டங்கைலைவெற்பாம்
சாலிநெற்பொருவுகள்ளு மருந்ததிதானுமாமே.

இ-ள். கோலமென்பது, அழகு பன்றி பாக்கு நீரோட்டம்பீர்க்குக் கும்பெயர், மாலியென்பது, சூரியன்கள்ளுக்கும்பெயர், மாந்தலென்பது, சாதல் உண்டலுக்கும்பெயர், வேலென்பது, வேலயுதம்ஆயுதப் பொதுவிற்கும்பெயர், வேதண்டமென்பது, வெள்ளிமலைக்கும்பெயர், சாலியென்பது, நெற்பொது கள் அருந்ததிக்கும்பெயர்-எ-று. ௨௰

உலவைகாற்றுமரத்தின்கொம்போ டுறுதழைவிலங்கின்கோடாம்
மலைதலேபொரல்சூடற்பேர் மந்திரிகுபேரன்வெள்ளி
அலர்பழிவிருபூநீராம் அவிர்தலேயொளிவீறற்பேர்
எலிபூரநாளெலிப்பேர் இரணம்பொன்கடன்மாணிக்கம்.

இ-ள். உலவையென்பது, காற்றுமரக்கொம்பு தழைமிருகத்தின்கொம்புக்கும்பெயர், மலைதலென்பது, பொருதல் அணிதலுக்கும்பெயர், மந்திரியென்பது, குபேரன் சுக்கிரனுக்கும்பெயர், அலரென்பது, பழிச்சொல்மலர்க்கப்பு நீருக்கும்பெயர், அவிர்தலென்பது, ஒளிசெய்தல்மிறலுக்கும்பெயர், எலியென்பது, பூரநட்சத்திரம் எலிக்கும்பெயர், இரணமென்பது, பொன்கடன்மாணிக்கத்திற்கும்பெயர்-எ-று. ௨௧

ஆலயநகரங்கோயி லானையின்கூடமும்பேர்
பாலமேமழுநெற்றிப்பேர் பவித்திரஞ்சுசிதருப்பை
நூலோர்மந்திரிகள்பார்ப்பார் நுவல்கவிப்புலவற்கும்பேர்
வேலாவலயந்தான்பூமி விரிகடலிருபேராமே.

இ-ள். ஆலயமென்பது, நகரம் தேவாலயம்யானைநிற்குங்கூடத்திற்கும்பெயர், பாலமென்பது, மழுப்படை நெற்றிக்கும்பெயர், பவித்திரமென்பது, தூய்மைதருப்பைக்கும்பெயர், நூலோரென்பது, மந்திரிகள்பிராமணர்புலவருக்கும்பெயர், வேலாவலயமென்பது, பூமிகடலுக்கும்பெயர்-எ-று. ௨௨

சூலியேகருப்பப்பெண்ணுந் துர்க்கையுஞ்சிவனுமப்பேர்
வாலியேபலாயுதன்கிட் கிந்தையின்மன்னன்பேராம்
பால்புளைமயியல்புதிக்குப் பகுத்தல்பாலென்னுமைம்பேர்
ஏலமேமயிச்சாந்தோடே யேலத்தினினிறப்பமாமே.

இ-ள். சூலியென்பது, கருப்பவதிதுர்க்கைசிவனுக்கும்பெயர், வாலியென்பது, பலதேவன்கிட்கிந்தைமன்னனுக்கும்பெயர், பாலென்பது,

பக்கம்குணநிசை பங்குபாலுக்கும்பெயர், ஏலமென்பது, மயிர்ச்சா ர்ந்து ஏலத்தின் வேறுபாட்டிற்கும்பெயர்-எ-று. ௨௧

லகரவெதுகை-முற்றிற்று.

வகரவெதுகை.

நவமென்பபுதுமைசேண்மை யொன்பதுநற்கார்காலம்
சவனமேகலக்கம்வெம்மை குதிரையின்கதிபோர்காடாம்
உவணமேகலுழனுயுயர்ச்சிக்குங்கழுகுக்கும்பேர்
பவனமேயிராசிபூமி படர்காற்றுமனையேகோயில்.

இ-ள் நவமென்பது, புதுமைசேட்புஒன்பதுமழைகாலத்திற்கும்பெயர், சவனமென்பது, கலக்கம் வெப்பம்குதிரைநடையுத்தம் காட்டுக்கும்பெயர், உவணமென்பது, கருடன்உயரம்கழுத்திற்கும்பெயர், பவனமென்பது, இராசிப்பொது பூமிகாற்று வீடு அரசமனைவிக்கும் பெயர்-எ-று. ௧

புவனநீர்புவியுமாகும் புரத்தலேகாத்தல்வண்மை
நுவணைநூலுண்மைமின்றி நூலேசாத்திரமுந்தந்தும்
தவமெனம்மிருதிகுன்றல் தந்தேநூல்சாத்திரப்பேர்
சிவநன்மைகுறுணிமுத்தி சீவனேயுயிர்வியாழம்.

இ-ள். புவனமென்பது, நீர்பூமிக்கும்பெயர், புரத்தலென்பது, காத்தல்கொடுத்தலுக்கும்பெயர், நுவணையென்பது, கல்விநூல்நுட்பம்தினைமாவிற்கும்பெயர், நூலென்பது,சாஸ்திரம்பஞ்சுநூலுக்கும்பெயர், தவமென்பது,மிருதிகுறைதலுக்கும்பெயர், தந்தென்பது, பஞ்சிநூல் சாஸ்திரத்துக்கும்பெயர், சிவமென்பது, நன்மை குறுணி மோட்சத்திற்கும்பெயர், தவனென்பது, உயிர்பிரகஸ்பதிக்கும்பெயர்-எ-று. ௨

இவறலேமறதியாசை யென்பபேரிசைக்குமப்பேர்
இவர்தலேயெழுச்சியாசை யேறுதல்சேரன்மேவல்
சுவவென்பபுள்ளின்மூக்குஞ் சுவர்க்கமுஞ்சுண்டலும்பேர்
குவவென்பதிரட்சியற்று குவிதல்பெருமைக்கும்பேர்.

இ-ள் இவறமென்பது, மறதிஆசைபேரிசைக்கும்பெயர், இவர்தலென்பது, பறவைமூக்கு தேவலோகம்மூஞ்சுருக்கும்பெயர், குவவென்பது, திரண்டவடிவு குவிதல் பெருமைக்கும்பெயர்-எ-று. ௩

தவிசென்பதருக்குமெத்தை யில்கடமுப்பேர்தானே
சவிமணிக்கோவைசெவ்வி சாற்றுயபயனக்காந்தி
நவிரமேலமஞ்ஞைபுன்மை நன்மலையுடனேபுச்சி
நவிலல்சொல்லுதல்பண்ணற்பேர் நவியமேமழுக்கோடாலி.

இ-ள். தவிசென்பது, தடுக்குமெத்தையானைமேற்றவிசுக்கும்பெயர், சவியென்பது, மணிக்கோவை செவ்வை அழகுஒளிக்கும்பெயர், நவிரமென்பது, மயில் புன்மை மலை உச்சந்தலைக்கும்பெயர், நவிலலெ

ன்பது, சொல்லல்நெய்தலுக்கும்பெயர், கவியமென்பது, மழுப்படை
கோடாலிக்கும்பெயர்—எ-று. ௪

கவுசிகன்விளக்குத்தண்டோர்பண்பட்டுக்கடியகோட்டான்
சவுரியேதிருமால்கள்வன் சனியமனிவையநாற்பேர்
மவுலியமுடிகோடீரம் வட்கலென்பதுநாணங்கேடாம்
கவலைசெந்தினையோர்வல்லி கவர்வழிதுன்பநாற்பேர்.

இ-ள். கவுசிகமென்பது, விளக்குத்தண்டு ஓர்பண்பட்டுச்சீலைகோட்டானுக்கும்பெயர், சவுரியென்பது, திருமால் கள்வன்சனிஇயமனுக்கும்பெயர், மவுலியென்பது, கிரீடம்சடைக்கும்பெயர், வட்கலென்பது நாணம்கெடுதலுக்கும்பெயர், கவலையென்பது, கம்பு ஓர்கொடி கவர்வழி துன்பத்திற்கும்பெயர்—எ-று. ௫

சேவகம்வீரம்யானைத் துயிலிடத்துயிலுஞ்செப்பும்
சீவனியோர்மருந்து செல்வழித்திறத்தோசை
ஆவணம்புணர்தம்வீதி யங்காடியுரிமைநாற்பேர்
ஈவியேதுடைத்தலாடை கொய்சகமுப்பேரே.

இ-ள். சேவகமென்பது, வீரம் யானைத்துயிலிடம் நித்திரைக்கும்பெயர், சீவனியென்பது, ஓர்மருந்துசெல்வழித்திறத்தினோசைக்கும்பெயர், ஆவணமென்பது புணர்பூசை நட்சத்திரம்தெருக்கடைவீதிக்கும்பெயர், ஈவியென்பது, துடைத்தல் வஸ்திரம் கொய்சகத்திற்கும்பெயர்-எ-று. ௬

உவணமதிலோர்பக்க முறுணிபுள்ளமுள்ளில்
தவடென்பதப்பியானை கழுத்திடுபுரசைக்கும்பேர்
சிவையுமைமரவோர்கொல்ல னுலைமுகந்திரியுமோரி
கவையேயாலவியங்காடு கவர்வழிவெள்ளிளங்காய்.

இ-ள் உவணமென்பது, மதில்ஓர்பக்கம்குளம்பள்ளம் அந்தப்புரத்துக்கும்பெயர், தவடமென்பதுமரக்கொம்புயானைக்கழுத்திற்கட்டுங்கயிற்றுக்கும்பெயர், சிவையென்பது, பார்வதி மரவேர் கொல்லனுலைமுகம் நரிக்கும்பெயர், கவையென்பதுஆயிலியநட்சத்திரம்காடுகவர்வழி எள்ளிளங்காய்க்கும்பெயர்-எ-று. ௭

சிவப்பென்பசினமுஞ்செம்மை யுடன்சினக்குறிப்புமுப்பேர்
உவப்பென்பமகிழ்ச்சிமேடாம் ஒழுக்கம்வழியாசாரம்
தெவிட்டலேயடைத்தல்கான்ற னிறைதலுமொலியுஞ்செப்பும்
துவக்கதோல்பிணர்க்கிரண்டாம் சூழலேயிடம்விசாரம்.

இ-ள். சிவப்பென்பது, கோபம்சிவப்புகோபக்குறிப்புக்கும்பெயர், உவப்பென்பது களிப்புமேட்டைக்கும்பெயர், ஒழுக்கமென்பது, வழி ஒழுக்கத்திற்கும்பெயர், தெவிட்டலென்பது அடைத்தல் உமிழ்தல் நிறைதல் சத்தத்துக்கும்பெயர், துவக்கென்பது தோல் பிணக்குக்கும்பெயர், சூழலென்பது இடம் ஆராய்தலுக்கும்பெயர்—எ-று. ௮

சேவலேகாவலோடு சேறுபிள்ளாண்முப்பேரே
கேவலந்தனிமைமுத்தி கிரமெனபதுபாலகிள்ளை
பூவைசாரிகைகாயாவாம் புலிசிங்கமுழுவைசார்ந்த
வாவலேவருஞ்சிபுள்ளுந் தாவலும்வருக்கலாமே.

இ-ள். சேவலென்பது, காவல் சேறுமயிலொழிந்தபறவையாணுக்கும்பெயர், கேவலமென்பது, தனிமை மோட்சத்திற்கும்பெயர், கிரமென்பது, பால்கிளிக்கும்பெயர், பூவையென்பது நாகணவாய்ப்புள் காயாமரத்திற்கும்பெயர், புலியென்பது, சிங்கம் புலி நால்வகைச்சாந்திலொன்றுக்கும்பெயர், வாவலென்பது வெள்ளம் தாண்டலுக்கும் பெயர்-எ-று. ௯

சுவல்பிடர்தோன்மேன்மேடு துரகதக்குஞ்சநாற்பேரே
கவிமந்திபுலவன்சுங்கன் சுழியெனபமிகுதிகாயம்
நவிரேயாண்மயிர்பண்வாளாம் நாஞ்சில்மதிலுங்கலப்பை
கவிகைதயேகுடைகொடிப்பேர் கடிப்பங்காதணிபூண்செப்பாம்.

இ-ள். சுவலென்பதுபிடரிதோன்மேல்மேடு குதிரைமயிருக்கும்பெயர், கவியென்பது, குரங்கு புலவன் சுக்கிரனுக்கும்பெயர், சுழியென்பது, மிகுதி சுழிக்கும்பெயர், நவிரென்பது ஆண்மயிர்மருதயாழ்மாத்திரம்வாளுக்கும்பெயர், நாஞ்சிலென்பது, மதிலுருப்புகலப்பைக்கும் பெயர்கவிகையென்பது குடைகொடைக்கும்பெயர், கடிப்பமென்பது காதணி ஆபரணச்செப்புக்கும்பெயர்-எ-று. ௰

மாவண்டுபெருமைபிண்டி வாசிகூப்பிடல்வெறுத்தல்
காவிறுவிலக்குசெல்வங் கருநிறல்கமலைபத்தாம்
கோவிழிபசுநீர்திக்குக் குலிசமவெண்கிரணம்பூமி
ஏவுரைசுவர்க்கமேவந்த விறங்கல்வெற்பீரேழாமே.

இ-ள். மாவென்பது வண்டுபெருமைசெம்மாகுதிரை அழைத்தல் வெறுப்பு விலக்கின்பொது செல்வமகருநிறம் திருமகளுக்கும்பெயர், கோவென்பது, கண் பசுநீர் திகைவச்சிராயுதம ஆகாயமகிரணம் பூமி அம்புசொல் தேவலோகம் அரசன் இறங்கல் மலைக்கும்பெயர்-எ-று.

ஆவியேவாவுநற்ப மாருயிர்புகைமுச்சம்பேர்
கூவிரந்தேர்மொட்டாம் குவடுநீண்மலைவெற்புச்சி
காவியேகுவளைகாவிக் கல்லொடுகள்ளுமுப்பேர்
நாவிதன்மஞ்சிகன்கார்த் திகைபூரநாளுமாமே.

இ-ள் ஆவியென்பது, குளம்வாசனைஉயிர்ப்புகை உயிர்ப்புக்கும்பெயர், கூவிரமென்பது, தேர்மேதர்க்கொடிஞ்சுக்கும்பெயர்குவடென்பது மலையினுச்சிக்கும்பெயர், காவியென்பது, கருங்குவளைகாவிக்கல் கள்ளுக்கும்பெயர், நாவிதனென்பது அம்பட்டன கார்த்திகைநட்சத்திரம் பூசநட்சத்திரத்துக்கும்பெயர்—எ-று. ௰௨

ஆவென்பதிரக்கம்பெற்ற மாச்சாவோடிசைவியப்பாம்
காவென்பதலைப்பூஞ்சோலை காத்தலோட்சிறைகோற்பேரே
பாவென்பதுநூற்பா பாவிசெல்பரப்புமாகும்
தாவென்பகைவருத்தந் தாண்டுதல்வலிகேடும்பேர்.

இ-ம். ஆவென்பது, இரக்கம்பசு ஆச்சாமரம் இசை அதிசயத்துக்கும்பெயர் காவென்பது, கலைச்சோலை இரட்சித்தல் கோட்சுமைக்கும்பெயர் பாவென்பது, பஞ்சிநூல் பாவெண்பாமுதலியபா பரவுதல்பரப்புக்கும்பெயர், தாவென்பது பகைதுன்பம் தாண்டுதல்வலுமை கெடுதலுக்கும்பெயர்—எ-று. ௱௫

கவ்வையேபழிச்சொற்றுன்பங் கள்ளொலியெள்ளிளங்காய்
பவ்வமேகுழிநீர்வாரி பருமக்கணுவுவாயாம்
தவ்வைமுன்பிறந்தாளோடு தாயுமூதேவியும்பேர்
நவ்வியேதோணிமானு நன்றெனபெருமைநன்மை.

இ-ள். கவ்வையென்பது, பழிச்சொல் வருத்தம் கள் சத்தம் எள்ளிளங்காய்க்கும்பெயர், பவ்வமென்பது, நீர்க்குழி கடல் பாக்கணுவு பௌர்ணமிக்கும்பெயர், தவ்வையென்பது, அக்காள் தாய் மூதேவிக்கும்பெயர், நவ்வியென்பது, தோணி மானுக்கும்பெயர், நன்றென்பது, பெருமை நன்மைக்கும்பெயர்-எ-று. ௱௬

அவலேசிற்றுண்டிபள்ள நீர்நிலையாகுமப்பேர்
செவிலிமேல்வளர்த்தகைத்தாய் முன்புமக்கவமுஞ்செப்பும்
கவுடமோர்கொடியோர்தேச மிருபெயர்கழறலாமே
சுவடிவச்சிராங்கியாமென சுபமெனபழகுவெண்மை.

இ-ள். அவலென்பது, சிற்றுண்டி பள்ளக் குளத்திற்கும்பெயர், செவிலியென்பது, செவிலித்தாய் அக்காளுக்கும்பெயர், கவுடமென்பது, ஓர்கொடி ஓர்தேசத்துக்கும் பெயர் சுவடென்பது, வச்சிராங்கி ஓர் நெல்லுக்கும்பெயர், சுபமென்பது, அழகு வெண்மைக்கும்பெயர்.

பவமென்பசனனம்பாவம் பாவந்தீவினைதியானம்
சவுரியங்களவுவீரம் தண்மைதான்குளிர்ச்சிதாழ்வு
அவமொருதானியப்பேரெனபநெல்லிக்குமப்பேர்
யவனர்சோனகர்கண்ணாளர் சித்திரக்காரரென்ப.

இ-ள். பவமென்பது, பிறப்பு பாவத்திற்கும்பெயர்பாவமென்பது தீவினை தியானத்திற்கும்பெயர், சவுரியென்பது, களவு வீரத்திற்கும் பெயர், தண்மையென்பது குளிர்ச்சி தாழ்விற்கும்பெயர், அவமென்பது, ஓர்வகைத்தானியநெல்லிற்கும்பெயர், யவனரென்பது, சோனகர் கண்ணாளர் சித்திரக்காரருக்கும்பெயர்—எ-று. ௱௭

ஆவணந்தான்சட்டை கடைமறைவாணவாடை
எவ்லாவியங்காணென்ப வெய்தியவ்வுமைக்கும்பேர்.

ஒவியார்சிற்பநூலோ ரொப்பித்தக்காரரும்பேர்
ஓவிரக்கச்சொனீக்கமோடுநீர்தக்கபாடம்.

இ-ள். ஆவரணமென்பது, சட்டைதடுத்தல் மறைவு கோட்டைவஸ்திரத்துக்கும்பெயர், ஏவலென்பது வியங்கோல் தரித்திரத்துக்கும் பெயர், ஓவென்பது இரக்கச்சொல் நீக்குதல் மடையடக்கும் கதவிற் கும்பெயர்—எ-று. ௬௭

அவ்வையேதாயின்பேரு மவ்வையோடிருபேராமே
செவ்வியேயார்பொழுதிற்றோடு செப்பியபருவமாகும்
தெவ்வமர்பகையிரண்டாம் தீவினைகொடுமைபாவம்
சைவமோர்புராணமீசன் சமயத்தின்விகற்பமாமே.

இ-ள். அவ்வையென்பது, தாய் ஔவைக்கும்பெயர் செல்வியென்பது, அழகு காலம் பருவத்திற்கும்பெயர் தெவ்வவென்பது, யுத்தம்பகைக்கும் பெயர், தீவினையென்பது கொடுமை பாவத்திற்கும்பெயர், சைவமென்பது, ஓர்புராணம் சிவசமயத்தின் வேறுபாட்டிற்கும் பெயர்-எ-று. ௬௮

வகரவெதுகை-முற்றிற்று.

ழகரவெதுகை.

விழவென்பமிதுனராசி வியன்குமிற்சவமுமாகும்
கழையெனபுனர்தமூங்கில் கரும்பெனவிரும்புமுப்பேர்
கழல்கழங்கெல்செருப்புக் காலணிமாலிந்நாற்பேர்
கிழமைமுப்பிரிவைபண்பாம் கிழிநிதிபொதுகீற்றுமே.

இ-ள். விழவென்பது, மிதுனவிராசிதிருவிழாவிற்கும்பெயர், கழைமையென்பது, புனர்பூசநட்சத்திரம் மூங்கில்கரும்புக்கும்பெயர், கிழமையென்பது முதுமை உரிமை குணத்திற்கும்பெயர், கிழியென்பது நிதிமுடிப்பு கீற்றுக்கும்பெயர்-எ-று. ௧

சூழியேயகளையும்வெய்ய தும்பியின்முகப்படாமும்
பாழியேவழிவிலங்கின் படுக்கையூர்பற்றிலாரூர்
நாழியேயளக்குநாழி நாழியேபூராட்டாதி
ஆழியேமோதிரநேமி யலைகடல்கரையேவட்டாம்.

இ-ள். சூழியென்பது, சுனை யானைமுகப் படாத்திற்கும் பெயர், பாழியென்பது, வலிமைமிருகத்தின்படுக்கைமுனிவர் பகைவருக்கும் பெயர், நாழியென்பது, அளக்குநாழிகைபூராட்டாதி நட்சத்திரத்திற்கும் பெயர், ஆழியென்பது மோதிரம் சக்கராயுதம் கடல்கடற்கரை வட்டம் வடிவிற்கும்பெயர்-எ-று. ௨

இழுமெனலோசையென்பவினிமையுமியர்புமப்பேர்
விழுமமேசிறப்புச்சீர்மை யிடும்பையுமித்தமபேர
தொழுவென்பதுழலைகானே யிரேலோனுஞ்செல்லும்
செழுமைமேவளங்கொழுப்பாம் தேமொழனபநறவும்வண்டே.

இ-ள். இழுமெனலென்பது, அங்காணலோசை-இனிமைக்கும் பெயர், விழுமமென்பது, சீர்மை-துன்பத்துக்கும்பெயர், செழுமையென்பது, வளமை-கொழுப்புக்கும்பெயர், தேமொழனென்பது, வண்டின்பெயர்.

கழுதேபெய்ப்பரண்வண்டே கவுகீழ்மைநுமைமென்மை
அழுவமேபரப்புநாடும் அழுங்கலிரக்கல்நோம்
கழுமல்பற்றொடுமயக்காம் காதலையாசைகாறல்
கழிதலென்பதுமேலசெல்தல் கடந்திடுமிகுதி மோர்.

இ-ள். கழுதென்பது, பிசாசம்-பரண்-வண்டுக்கும்பெயர், கவுவென்பது, கீழ்மை-பெருமை-மென்மைக்கும்பெயர், அழுவமென்பது, பரம்பு நாட்டிற்கும்பெயர், அழுங்கலென்பது, இரங்கல்-நோதலுக்கும்பெயர், கழுமலென்பது, பற்றுதல்-மயக்கத்திற்கும்பெயர், காதலென்பது, ஆசை சொல்லுதலுக்கும்பெயர், கழிதலென்பது, செல்தல்-கடத்தல்-மிகுதிக்கும்பெயர்-எ-று.

மாழைபொனணிலோகக்கட்டி மடைமையோர்புளிமாவோலை
கூழையேசிறகுமாதர் கூந்தல்வெம்படையுறுப்பாம்
தாழைதெங்கின்கோடும் சாகினிசெம்புகீரை
ஊழ்முறைவெயில்வகைப்பேர் ஊசிமேருசியாணி.

இ-ள். மாழையென்பது, பொன் உலோகக்கட்டி அறிவின்மை-அழகு-புளிமா-ஓலைக்கும்பெயர், கூழையென்பது, சிறகு பெண்மயிர் படையுறுப்புக்கும்பெயர், தாழையென்பது, தென்னமரத்துக்கும்பெயர்-சாகினியென்பது, செம்புசிறுகீரைக்கும்பெயர், ஊழென்பது, முறைமை வெயில் பகைக்கும்பெயர், ஊசியென்பது, இழைவாங்கி எழுத்தாணிக்கும்பெயர்-எ-று.

உழையென்பதிடமான்யாழி லோர்நரம்பிற்குமோராம்
குழையென்பதளிர்துவாரங் குண்டலஞ்சேறுநாற்பேர்
விழையென்பபுணர்ச்சிகாதல் வெறுக்கையின்பமிலொன்றோடு
வழிமாபிடம்பின்மார்க்கம் வழங்கலேகொடையுலாவல்.

இ-ள். உழையென்பது, இடம் மான் யாழின் ஓர் நரம்புக்கும்பெயர், குழையென்பது, தளிர் துளையுடைப்பொருள்-குண்டலம்-சேற்றிற்கும்பெயர், விழையென்பது, புணர்தல்-ஆசைக்கும்பெயர், வெறுக்கையென்பது, பொன் செல்வத்திற்கும்பெயர், வழியென்பது, பழமை-இடம்-பின் வழிக்கும்பெயர், வழங்கலென்பது, கொடுக்கல்-உலாவலுக்கும் பெயர்-எ-று.

ஈழம்பொன்கள்ளோர்தேசம் எல்லையேயளவைவெய்யோன்
மேழங்கவசவாடம் வேளாண்மைகொடையேமெய்மை
காழியர்வண்ணருப்பு வாணிகரிருபேர்காட்டும்
வேழமேகரும்பியானை கொருக்கச்சிவேணுநாற்பேர்.

இ-ள். ஈழமென்பது, பொன்கள் சிங்களதேசத்துக்கும்பேர்-எல்லையென்பது, அளவு சூரியனுக்கும்பேர் மேழகமென்பது, கவசம்-ஆட்டிற்கும்பேர் வேளாண்மையென்பது, கொடுத்தல் உண்மைக்கும் பேர், காழியரென்பது, வண்ணார்-உப்புவாணிக்கருக்கும்பெயர், வேழமென்பது, கரும்பு-யானை கொருக்குமூங்கிலுக்கும்பேர்-எ-று. எ

கூழென்பதுணவுபொன்று பயிரெனுங்கூறுமுப்பேர்
காழென்பமணியின்கோவை கற்பரல்சேகுவித்தாம்
யாழென்பமிதுனவீணை யிரலைநாளாதிரைப்பேர்
கீழெனபதிடங்கீழ்சாதி கீழ்திசைகயமைநாற்பேர்.

இ-ள். கூழென்பது, உணவு பொன் பயிருக்கும்பெயர், காழென்பது, மணிக்கோவை-பருக்கைகல்-மரவயிரம்-வித்தைக்குபேர், யாழென்பது, மிதுனவிராசி வீணை அச்சுவினி நட்சத்திரம் திருவாதிரைநட்சத்திரத்திற்கும்பெயர், கீழென்பது, இடம் ஈனசாதி கிழக்கு கீழ்மைக்கும்பெயர்-எ-று. அ

கோழியேகுருகோரூராம் குய்யமேமறைவுயோனி
மூழியேவாவிசோறு டகப்பையுமொழியுமுப்பேர்
மூழையேயகப்பைசோறும் மூதஞ்சுள்கொடிவிசாத்தி
நூழிலேகோறல்யானை நுண்கொடிகொடிக்கத்தான்பேர்.

இ-ள். கோழியென்பது, கோழி எறையூருக்கும்பெயர், குய்யமென்பது, மறைவுபெண்குறிக்கும்பெயர், மூழியென்பது, குளம்சோறு அகப்பைக்கும்பெயர், மூழை யென்பது, அகப்பை - சோற்றிற்கும் பெயர், நூழிலென்பது, கொல்லல் யானை படர்கொடி கொடிக்கத்தானுக்கும்பெயர்—எ-று. கூ

தொழுதியுள்ளொலிகூட்டப்பேர் தொழுவிறையடிமைகூட்டம்
கெழுவுதன்மயக்கம்பற்றும் கீலாலங்குரைநீர்காட்டி
குழருளேயுடைபொருள்பெண் மயிரிசைக்குழன்முப்பேரே
அழுவென்பவீதல்கேடாம் அவிநெய்சோறமருண்டி.

இ-ள். தொழுதியென்பது, பறவையிருலி கூட்டத்திற்கும்பெயர் கெழுதலென்பது, மயக்கம் பற்றுக்கும்பெயர், கீலாலமென்பது இரத்தம்-நீர்காடிக்கும்பெயர், கிழலென்பது, உட்டுளைம் பொருள் கூந்தல் மேல் குழலுக்கும்பேர், அழுவென்பது, சாதல்கேட்டிற்கும்பெயர், அவியென்பது நெய் சோறு தேவருணவிற்கும்பெயர்-எ-று. ய

ழகரவெதுகை-முற்றிற்று.

ளகரவெதுகை.

குளறுதல்கரும்புள்கட்டி குட்டமுமிட்டநாமம்
களமமர்க்களமேகண்டம் களாவிளங்கறுப்பேயில்லாள்
வளமைமாட்சிமைகொழுப்பாம் வாருணங்கடலுமேற்கும்
விளவெண்பகமர்விளாவாம் விம்மலேலங்குதலொலித்தல்.

இ-ள். குளமென்பது - நெற்றி - வெல்லம் - குளத்திற்கும் பெயர்-களமென்பது-போர்க்களம் - கழுத்துகளாச்செடி - நஞ்சு கரும்புமனைக்கும்பெயர் வளமையென்பது-மாட்சிமை - கொழுப்புக்கும்பெயர்-விளப்பு-விளாமரத்திற்கும்பெயர்-விம்மலென்பது-அழுதல் - ஒலித்தலுக்கும்பெயர்—எ-று. க

முளரியேவிறகுசெந்தி முண்டகஞ்சிறுமைகாடாம்
விளரென்பதிளமைதானே வெளுப்பொடுகொழுப்புமாகும்
களபமேயானைக்கன்று சமம்சாந்துகலவைமுப்பேர்
உளர்தலேசிந்தலாகுந் தடவலுமுறைக்கற்பாற்றே.

இ-ள். முளரியென்பது - விறகு-நெருப்பு-தாமரை-நுண்மை - காட்டிற்கும்பெயர் - விளரென்பது - இளமை - கொழுப்புக்கும்பெயர் களமென்பது-யானைக்கன்று-சாந்து - சலவைக்கும்பெயர் - உளர்தலென்பது-சிந்தல்-தடவலுக்கும்பெயர்-எ-று. உ

குளிர்மழுநண்டிருந்தால் குளிர்கவண்முழாமீன்றானை
நளிர்குளிர்பெருகைஞெண்டி நாட்டியச்செறிவுநாற்பேர்
ஒளிவட்டந்தான்கண்ணாடி சக்கரமிருபேராகும்
இளியிசைசித்தலென்னே யிணங்குதலுரித்தற்கும்பேர்.

இ-ள். குளிரென்பது மழுப்படை - நண்டு - தங்கல - குளிர்ச்சி-கவண்குடமுழா-மீனொழுங்கிற்கும் பெயர்-நளிரென்பது-குளிர்ச்சி - பெருமை-நண்டு-நெருக்கத்திற்கும்பெயர் ஒளிவட்டமென்பது - கண்ணாடி சக்கராயுதத்துக்கும் பெயர்-இளியென்பது - எழிசையினொன்று - இசித்தல்-இகழ்ச்சிக்குறிப்பு - இணங்குதல்-உரித்தலுக்கும்பெயர்-எ-று.

பளிதமென்பதுகற்பூரம் பல்லமெண்ணைக்குமாகும்
வெளிதனில்வேழத்தம்பம் வெண்பயிர்கடைதரிப்பேர்
களிறென்பவத்தநாளே கறையடிசூறவுபன்றி
வொளியிருசுடரேதீயே யொளிப்பிடம்புகழுமாமே.

இ-ள். பளிதமென்பது - கற்பூரம் - பல்லமெனுமோர் - எண்ணிற்கும்பெயர்-வெளியிலென்பது ஆனில் - யானைத்தறி-தயிர்கடை தறிக்கும்பெயர்-களிறென்பது-அத்தநட்சத்திரம்-யானைசுறு - பன்றிக்கும் பெயர்-ஒளியென்பது சூரியர்-சந்திரர் - நெருப்பு-ஒளிப்பிடம் புகழுக்கும் பெயர்-எ-று. ௩

காளிதஞ்சோருகண்ட சருக்கரைகுழம்புபட்டாம்
ஒளியேயானைகூட மொழுக்கெனுமவழக்குறுவோர்
கோளிதோள்மரமேயத்தி கொள்வோனுங்கொழுஞ்சிக்கும்பேர்
மீளிதிண்ணியவன்வலிபேர் மேனமன்பெருமைக்கும்பேர்.

இ-ள். பளிதமென்பது-சோறு - கண்ட சருக்கரை - குழம்பு பட்டச்சீலைக்கும் பெயர் - ஒளியென்பது யானைக்கூட்டம் - ஒழுங்குக்கும் பெயர் - கோளியென்பது ஆலமரம்-அத்திமரம்-கொள்வோன், கொழுந்தேமாக்கிற்கும் பெயர்-பீளியென்பது - திண்ணியன் - வலிமையுள்ளான்-பெருமைக்கும் பெயர்—எ-று. ரு

அளை தயிர்முழைபுற்றாகும் அசனியேயுருமுச்சீரம்
உளைபரிமீதுகட்டு மயிர்பிறமயிருமாகும்
கிளையென்பதோர்பண்மூங்கில் கேளொடுகிளைத்தலும்பே
ரிளைபுயிலிளமைவேலி தலைக்காவலிறைகாற்பேரே.

இ-ள். அளையென்பது - தயிர் மலைக்குகை - புற்றுக்கும்பேர் - அசனியென்பது-இடி-வச்சிராயுதத்திற்கும்பெயர் - உளையென்பது - குதிரையிற்கட்டுமயிர்-பிறமயிர்க்குப்பெயர், கிளையென்பது-வழிசையினொன்று-மூங்கில்-உறவு-கிளைக்கும்பெயர்-இளையென்பது - மேகம் - இளமை-வேலி-தலைக்காவலுக்கும்பெயர்-எ-று. ௬

உள்ளலேவநினைவுள்ளானுமேபேருழப்பென்பவலியுற்சாக
ஞெள்ளலேபள்ளமேன்மை நீணடவிதிருமப்பேரே
யெள்ளலேநகையிழிவுமாம் யாமமெந்தற்கிரவுசாம
நௌ்ளலேசோம்பிளைத்தலச்சக் குறிப்பென்றுநுவலற்பாலாம்.

இ-ள். உள்ளலென்பது - நினைத்தல் - உள்ளான் குறிவிற்கும் பெயர்-உழப்பென்பது-வலிமை - உற்சாகத்திற்கும்பெயர் - ஞெள்ளலென்பது - பள்ளம்-மேன்மை-தெருவிற்கும்பெயர்-யெள்ளலென்பது - கைநகை-இழிவுக்கும் பெயர்-யாமமென்பது-தென்றிசை-இராத்திரி - காமத்திற்கும்பெயர்-நௌ்ளலென்பது - சோம்பல்-இளைத்தல் அச்சக்குறிப்புக்கும்பெயர்-எ-று. எ

வள்ளென்பகாதுகூர்மை வலிவளம்வாளேவாரம்
தெள்ளேயேமுசலிசங்கு வெளிறுவெள்ளாடுவெண்பா
வள்ளமேமுசுஞெண்டியானை கருநிரத்தவனேசோரம்
பள்ளியூர்ச்சிற்றூர்கோயில் பாயல்சண்படைநீத்தோருள்.

இ-ள். வள்ளென்பது - காது - கூர்மை - வலிமை-வளமை - வாளாரம்-வாருக்குக்கும்பெயர் வெள்ளையென்பது-பலபத்திரன்சங்குவெள்ளை-வெள்ளாடு வெண்பாவிற்கும்பெயர்-பள்ளி யென்பது - மருதநிலத்தூர்-சிற்றூர் கோயில்-மக்கட்படுக்கை - நித்திரை மூவரிருப்பிடத்துக்கும்பெயர்—எ-று. அ

விளக்கொளிசோதியாளாம் வேள்வியேமகநாளீத
லளக்கேபுடவிசேறும் பளங்கடல்கார்த்திகைப்பே
ரிளைத்தலேபழுபத்கல் செறிதலேற்றைதன்முப்பே
ரிளைத்தலேயிளைப்பிரங்கலொன்றுமேழயிரவிவெய்யில்.

இ-ள். விளக்கென்பது - தீபம் - சோதிகளுக்கும்பெயர் - வேள்வியென்பது மகநட்சத்திரம்-கொடுத்தலுக்கும்பெயர் - அளக்கரென்பது புவிசேறு உப்பளம்-கடல்கார்த்திகைக்கும்பெயர்-இளைத்தலென்பது-

அனுபவித்தல்-நெருங்கல்-நிறைதலுக்கும்பெயர்-இளைத்தலென்பது-மெலிதல்-இரங்கலுக்கும்பெயர்-எனறாகிழனபது சூரியன் வெயிலுக்கும்பெயர். ௯

பிள்ளையேவடுகன்சாக்கை பெட்டலாசைபெருக்கம்வேட்கை
மள்ளரேமள்ளல்வீரர் மறவர்களுழவர்க்கும்பே
ருள்ளமேமுயற்சிநெஞ்சா முணற்றுமூக்கமுத்தாளாண்மை
வள்ளியேவல்லிசெங்கை வளாபுணர்மழைமுப்பேரே

இ-ள். பிள்ளையென்பது-வயிரவன்-சாக்கைக்கும்பெயர்-பெட்டலென்பது ஆசை-ஆசைபெருக்கத்திற்கும்பெயர்-மள்ளரென்பது உழவர் படைவீரர்-திண்ணியோர்-குறிஞ்சிநிலமாக்களுக்கும்பெயர்-உள்ளமென்பது-முயற்சி-நெஞ்சுக்கும்பெயர்-உஞற்றலென்பது இழுமை-முயற்சிக்கும்பெயர்-வள்ளியென்பது பண்டாரம்-வளை-ஆபரணத்திற்கும்பெயர்-எ-று. ௰

காளமேயூதுகொம்பு கழுநஞ்சுகருமைநாற்பேர்
வேளாறுமுகன் காமப்பேர் வீழ்தியூன்கொண்டசெல்லல்
கோளிடையூரோடைபன்கோன் கொலைகுணமனைவலிபோய்
ஞாளியேசுணங்கன்கள்ளா நான்முகனாமன்வேதா.

இ-ள். காளமென்பது ஊதுகொம்பு கழுமரம் விடம் கருப்புக்கும் பெயர் வேளென்பது குமரன் மன்மதனுக்கும்பெயர் வீழ்தியென்பது தசைபொல்லாங்கு செல்வத்திற்கும் பெயர் கோளென்பது இடையூறு நவக்கிரகம் கொலை குணம், வலிமை பொய்களுக்கும்பெயர் ஞாளியென்பது நாய்களுக்கும்பெயர், நான்முகனென்பது அருந்தவன் பிரமதேவனுக்கும்பெயர்-எ-று. ௰௧

களமென்பமிடறுகோட்டி களர்நிலக்கருமைநாற்பேர்
தளமிலைபடையேசாந்து தாழிபூஞ்சுழிமேன்மாடம்
அளகமேமாதர்கோதி யாண்மயிர்கூழச்சிமுப்பேர்
தளைவிலங்கொடுதொடர்ச்சி தாட்சிலம்பண்மயிர்ப்பேர்.

இ-ள். களமென்பது-கழுத்து கூட்டம்-களர்நிலம்-கருப்புக்கும்பெயர்-தளமென்பது-இலை-சேனை சாந்து-சாடி-பூஞ்சுழி-மேன்மாடத்திற்கும் பெயர் அளகமென்பது பெண்மயிர் கீர்மயிர்ச்சிக்கும்பெயர் தளையென்பது விலங்கு தொடர்பு காற்சிலம்பு ஆண்மயிர்க்கும்பெயர்-எ-று.

புள்ளுவண்டகிட்டம்புட்பேர் புளகந்தாய் கண்ணாடிப்பாங்
கள்ளென்பகள்ளகள்ளாங் கனவிகீர்வேர்ப்பன்றி
புள்ளுறஞ்செறிவுநாதா டயில்வலிபற்றிருப்பாம்
வெள்ளமென்மிகுதிமுன்னர் வேணுவேமூங்கில்வாள்.

இ-ள். புள்ளென்பது வண்டு அவிட்ட நட்சத்திரம் பறவைக்கும் பெயர் புளகமென்பது கண்ணாடி மயிர் சிலிர்க்கலுக்கும்பெயர் கள்ளென்பது களவு கள்ளுக்கும்பெயர் கனவியென்பது கேழற்பன்றிக்கும்பெயர், அளவென்பது வலிமை நெருக்கம் கருணையாள் ளுக்கும்பெயர், வெள்ளமென்பது ஓரெண்மிகுதி கடலுக்கும்பெயர், வேணுவென்பது மூங்கில்வாளாயுதத்திற்கும்பெயர். ௰௩

வாளென்பதொளிகட்கப்பேர் வல்லரிதளிர்பைங்காயல்
கூளிபேய்தமரோசு குறள்படைத்தலைவன்கூட்டந்
தோளென்பபுயங்கையாகுஞ் சுந்தரியுமைமேசண்டன்
தேளென்பதனுடநாளே விருச்சிகந்தெருக்காலும்பேர்.

இ-ள். வாளென்பது பிரகாசம் வாளாயுதத்திற்கும்பெயர் வல்லரியென்பது தளிர் பசுங்காய்க்கும்பெயர் கூளியென்பது பேய் உறவு எருது குற்றம் பூதப்படைத்தலைவன் கூட்டத்திற்கும்பெயர் தோளென்பது தோள்கைக்கும்பெயர் சுந்தரியென்பது துற்கை மூஞ்சூருக்கும்பெயர், தேளென்பது அனுடநட்சத்திரம் விருச்சிகவிராசிதேளுக்கும்பெயர்-எ-று. ௰௪

அளியென்பநறவும்வண்டு மன்பொடுகொடையுநாற்பே
ரளவையேயெல்லைநாளா மாசாரந்தூர்க்கிமாரி
விளரியேயிளமையாழி லோர்நரம்பியாழ்நீள்வேட்கை
வளமென்பபதவியும்பல் பண்டமுவனப்புமாகும்.

இ-ள். அளியென்பது கள் வண்டு அன்பு கொடுத்தலுக்கும்பெயர் அளவையென்பது எல்லை நாளுக்கும்பெயர் ஆசாரமென்பது சீலந்தூய்மை பெருமழைக்கும் பேர் விளரியென்பது யிளமையாழிலோர்நரம்பு நெய்தநிலத்தியால் ஆசைப்பெருக்கத்தின்பெயர் வளமென்பது பதவி பலபண்டம் அழகிற்கும்பெயர்-எ-று. ௰௫

வள்ளமேமரக்கால்வட்டில் கடிகைவட்டிற்குமப்பேர்
வள்ளூரம்பசுவிரைச்சி வரைந்தலூன்பொதுவுமாகும்
மள்ளலேநரகஞ்சேறா மம்புநீர்புயல்வேயேவாம்
வெள்ளிலேவிளாப்படைப்பேர் வேலன்வேள்வெறியாட்டாளன்.

இ-ள். வள்ளமென்பது மரக்கால் வட்டில் நாழிகை வட்டிலுக்கும்பெயர் வள்ளூரமென்பது பசுவினிறைச்சி தசைப்பொதுவிற்கும்பெயர் அள்ளலென்பது நரகம்சேற்றிற்கும்பெயர் அம்பென்பது நீர்மேகம் மூங்கில் கணைக்கும்பெயர் வெள்ளி யென்பது விளாமரம் ஆசந்திக்கும்பெயர் வேலனென்பது முருகக்கடவுள் வெறியாட்டாளனுக்கும்பெயர்-எ-று ௰௬

காளையேயெருதுபாலைக் கதிபனல்லிளமையோன்பேர்
கூளியர்நண்பர்பூத கணவீரர்கொலைத்திறத்தோர்
கோளகைவட்டமோடு மண்டலிப்பாம்புகூறும்
கேள்வியேசெவிகல்விப்பேர் கிடங்ககழ்வாவியாமே.

இ-ள். காளையென்பது எருதுபாலைத் தலைவன் கட்டிளமையோனுக்கும்பெயர் கூளியரென்பது சினேகிதர் பூதகணவீரர் கொலையாளிகட்கும்பெயர் கோளகையென்பது வட்டவடிவு மண்டலிப்பாம்புக்கும்பெயர் கேள்வியென்பது காதுகல்விக்கும்பெயர் கிடங்கென்பது அகழிவாவிக்கும்பெயர்-எ-று. ௰௭

இளமையேதண்மைகாம மிளமையின்புருவமுப்பேர்
ரளறென்பநரகஞ்சேறு மக்காரம்படைவெல்லங்

இளரென்பகிரணக்கோடு மலர்ப்பூந்தாதாள்
பளரியோர்க்களங்கமெயன்ப கருமஞ்செய்யிதமுமாமே.

இ-ள். இளமையென்பது தாழ்மை காமம் இளமைப்பருவத்திற்கும்பெயர் அளறெனபது நரகம் சேற்றிற்கும்பெயர் அக்காரமென்பது புளவை வெல்லத்துக்கும்பெயர், இளரென்பது ஒளி பூந்தாதுக்கும் பெயர்—எ-று. ௧௮

ளகரவெதுகை-முற்றிற்று.

ஆக-வெதுகை-௰௬-க்குக்-கூடியசெய்யுள்-௨௭௩.

றகரவெதுகை.

இறவையேயபுட்டிலேணி யென்பகூர்மிகுட்சிகூர்மை
குறடெனபபலகைதிண்ணை கொண்மூவெலன்பதுவிண்மோ
புறவமோர்புள்ளுங்காடு முல்லைநன் னுல்லும்போற்றும்
புறணியேகுறிஞ்சிமுல்லை நிலத்தொடுபுறமுந்தோலும்.

இ-ள். இறவையென்பது கூடை ஏணிக்கும்பெயர் கூரென்பதுமிகுதி துணிக்கும்பெயர் குறடென்பது பலகை திண்ணைக்கும்பெயர் கொண்மூவென்பது ஆகாயம் மேகத்திற்கும்பெயர் புறவமென்பது ஓர்பறவை காடுமுல்லை நிலத்திற்கும்பெயர் புறவையென்பது குறிஞ்சிநிலம் முல்லைநிலம் புறம்தோலுக்கும்பெயர்-எ-று. ௧௯

மறஞ்சினம்பிணக்குகூற்று மலைந்தசேகைமுமாகுக்
குறிஞ்சியோரிசையோர்பண்ணே குறிஞ்சிசெம்முள்ளிக்குபேர்
பிரங்கலேமிகுதிவெற்பு நிறையொலிபெருமையைப்பேர்
குறும்பொறையிடன்றுகாடு குறிஞ்சிநன்னிலத்தூர்மப்பேர்.

இ-ள். மறமென்பது கோபம் பிணக்கு நமன் வீரத்திற்கும்பெயர் குறிஞ்சியென்பது ஓரிசை ஓர்பண் குறிஞ்சிநிலம் செம்முள்ளிக்கும் பெயர்பிரங்கலென்பது மிகுதி மலை நிறைத்தல் ஒலி பெருமைக்கும் பெயர் குறும்பொறையென்பது மலைகாடு குறிஞ்சி நிலத்தூருக்கும் பெயர்—எ-று. ௨௰

தாறுவிற்குதையேயில்லை தாழ்மரக்குலைமுட்கோலாஞ்
சேறென்மதும்பிசாரந் திக்திப்புவிழாவுகளே
யூறென்பதீமைதீண்ட லுயிர்க்கொலையிடையூறென்ப
வேறிடிமுதனாளாகுமிடமமேடருதுமப்பேர்.

இ-ள். தாறென்பது விற்குதை அளவு மரக்குலை முட்கோலுக்கும்பெயர் சேறென்பது சேறுசாரம் தித்திப்பு திருவிழா கள்ளுக்கும் பெயர் ஊறென்பது தீமைதொடுதல் கொலை துன்பத்திற்கும்பெயர் ஏறென்பது இடி அச்சுவினி நாள் இடபம் எருதுக்கும்பெயர்-எ-று.

சிறையேவரிடமாம்புள்ளின் சிறகொடுகாவலும்பேர்
கறையிறுத்திளவிரத்தங் கறும்புறல்விடம்பறைந்த
முறையென்பகோசைமேழும் முறைமையிம்முப்பேரென்ப
பிறழ்தலேலங்கெம்வேறு பெயர்தலோடெளிவிடற்பேர்.

இ-ள். சிறையென்பது வேறிடம் பறவையின்சிறகு காவலுக்கும்பெயர், கறையென்பது குடியிறை உதிரம் கறுப்பு உரல் நஞ்சுக்கும்பெயர், முறையென்பது, புத்தகம் பழமை முறைமைக்கும்பெயர், பிறழ்தலென்பது நடுக்கம் மாறுகப்போதல் ஒலிசெய்தலுக்கும்பெயர் எ-று. உஉ

ஏற்றலே கோடலென்ப வெதிர்த்துப்போர்செய்தலும்பே
ராற்றலே பொறைமுயற்சி யதிகமேவலிமைஞானந்
தோற்றலே வலிபிறப்புத் தோன்றுதல்புகழ்நாற்பேர்
போற்றலே புகழ்தலோம்பல் புறமென்பமுதுகுவீரம்

இ-ள். ஏற்றலென்பது கொள்ளல் எதிர்த்து போர்செய்தலுக்கும்பெயர், ஆற்றலென்பது பொறுத்தல் முயற்சி மிகுதி வலிமைஞானத்திற்கும்பெயர், தோற்றலென்பது, வலிமை, பிறத்தல், தோன்றுதல், புகழ்ச்சிக்கும்பெயர் போற்றலென்பது புகழ்தல் பாதுகாத்தலுக்கும்பெயர் புறமென்பது முதுகுவீரத்துக்கும்பெயர்—எ-று. உங

அற்றமேமறைவுஞ்சோர்வு மவகாசந்தானுமாகுங்
குற்றமேகுறைபழித்தல் குறையென்பதிடைச்சொலாசை
யெற்றெனவிரக்கமெற்ற லெறிதலெத்தன்மைத்தென்பல்
கொற்றியேதுர்க்கைநாமங் கோணிளங்கன்றுங்கூறும்.

இ-ள். அற்றமென்பது மறைவு சோர்வு சமயத்திற்கும்பெயர் குற்றமென்பது குற்றம் பழித்தலுக்கும்பெயர் குறையென்பது இடைச்சொல் ஆசைக்கும்பெயர் எற்றென்பது இரக்கச்சொல் அடித்தல் எறிதல் எத்தன்மைத் தென்றலுக்கும்பெயர் கொற்றியென்பது துர்க்கை பசுவிளங்கன்றுக்கும்பெயர்-எ-று. உச

உறழ்தலென்பவுணர்வுகலஞ் செறிவிடையீடொப்பைபேர்
ஊற்றலேயெறும்புநீரூற் றுலோகங்களுறவுயிர்ப்பே
உறுகணென்பதுவேதுன்ப முறுபயமிடிநோய்நாற்பேர்
உற்றவன்முனிபுத்தனென்ப வுலக்கையுமோணம்.

இ-ள். உறழ்தலென்பது புணர்ச்சிகலம்நெருக்கம்இடையீடு உவமைக்கும்பெயர் ஊற்றென்பது எறும்பு ஊற்று உலோகங்கள் சுற்றம் உயிருக்கும்பெயர் உறுகணென்பது துன்பம அச்சம் சரித்திரம் வியாதிக்கும்பெயர் உற்றவனென்பது முனிவன் அருகனுக்கும்பெயர் உலக்கையென்பது உலக்கை திருவோணநட்சத்திரத்துக்கும்பெயர்-எ-று.

விறலென்பசெறிவுவெற்றி வெருவுதல்பொருதற்பேர்
பொறுத்தலேபொறைதாங்கற்பேர் புந்தியேபுதன்புத்தி
யிறுத்தலேயொடுக்கந்தங்க லியம்புதன்முப்பேரென்ப
கறுப்பிறுங்கோபக்குறிப்பாங் கன்றுகைவளைகன்றாமே.

இ-ள். விறலென்பது நெருக்கம் வெற்றி அஞ்சுதல் யுத்தத்திற்கும்பெயர் பொறுத்தலென்பது பொறைசுமத்தலுக்கும்பெயர் புந்தியென்பது புதன் புத்திக்கும்பெயர் இறுத்தலென்பது ஒடித்தல் தங்கல் சொல்லுதலுக்கும்பெயர் கறுப்பென்பது கறுமை கோபக்குறிப்புக்கும்பெயர் கன்றென்பது கைவளை கன்றுக்கும்பெயர்—எ-று. உசு

பொறிமரக்கலமேசெல்வம் பூமகளெந்திரங்கள்
அறிவிலாஞ்சனையெழுத்தே தாடையும்பொறியிவையீரைம்பேர்
வெறியஞ்சுதல்கலக்கம் வெறியாட்டுவட்டநாற்றங்
குறிபொலிவாடுகளொடு கூறுநோயெனப்படுமே.

இ-ள். பொறியென்பது-தோணி-ஐஸ்வரியம்-இலக்குமி-சூத்திரம்-அறிவு-அடையாளம்-எழுத்து-ஐம்பொறி-தீகமனுக்கும்பெயர், வெறியென்பது-அஞ்சுதல்-கலக்கம்-தேவர்க்காடுங்கூத்து-வட்டம்-வடிவு-வாசனை-பிரகாசம்-ஆடுகள்-வியாதிக்கும்பெயர்-எ-று. உஎ

உறைபொருள்மருந்துவாழ்நா ளுணவுவெண்கலமேகாரம்
பெறுபடைக்கலத்தின்கூடே யெண்பிறக்கீறுபெய்தல்
நறியதாற்பிறையிடைச்சொ னகரநீர்த்துளியிவ்வாறா
அறைமுழைமோதல்பாறை திரைசிற்றின்மொழியாறுமே.

இ-ள். உறையென்பது-பொருள்-மருந்து-வாழ்நாள்-உணவுவெண்கலம்-உறைப்பு-ஆயுதவுறை-ஓரிலக்கக்குறிப்பு-பாலிற்பிரை-இடைச்சொல்-நகரம்-நீர்த்துளிக்கும்பெயர், அறையென்பது-மலையினுட்குகை-அறுதல்-பாறை-அலை-சிறுவீட்டிச்சொல்லுக்கும்பெயர்—எ-று.

இறைசிவனண்டன்வேந்தன் கையிறைகுடியிறைசிறந்தோன்
சிறுமைபுள்ளிறகுதங்கல் சென்னிகூனிப்பீராறே
யுறையுளென்பதுநாடூ ருறுதிநன்மைநல்ல
பொறைமலைதுறுகல்பாரம் பொறுமைசுமைகருப்பம்பூமி.

இ-ள். இறையென்பது-சிவன்-அண்டன்-அரசன்-கையிறை-குடியிறை-உயர்ந்தோன்-அற்பம்-பறவையினிறகு-தங்கல்-தலை-கூன்-வீட்டிறப்புக்கும்பெயர், உறையுளென்பது-நாடு-ஊர்ப்பொதுவுக்கும்பெயர், உறுதியென்பது-நன்மை-ஸ்திரத்தைக்கும்பெயர், பொறையென்பது-மலை-துறுகல்-பாரம்-பொறுமை-சுமை-கருப்பம்-பூமிக்கும்பெயர்-எ-று.

இறும்புதாமரையின்பூவே மலைகுறுங்காடேமற்றும்
இறும்பூதுதகைமைவெற்போ டதிசயங்குழைதூறென்றும்
கறங்கலேசுழலோசை கதிரெனப்பதிரவிசோதி
பறம்புயர்மலைமுலைப்பேர் பாய்மாவேகுதிரைவேங்கை.

இ-ள். இறும்பென்பது-தாமரைப்பூ-மலை-குறுங்காட்டிற்கும்பெயர், இறும்பூதென்பது-பெருமை-அதிசயம்-தளிர்-சிறுதூறுக்கும்பெயர், கறங்கலென்பது-சுழல்-ஒலிக்கும்பெயர், கதிரென்பது-சூரியன்-பிரகாசத்துக்கும்பெயர், பறம்பென்பது-மலை-முலைக்கும்பெயர், பாய்மாவென்பது-குதிரை-புலிக்கும்பெயர்-எ-று. உக

கூற்றென்பதியமன்சொல்லாங்கே மாமேனெழுத்தேதான்வேந்தன்
நாற்றநாறுதலுள்ளாமே நணவென்பதுகலந்தேற்றம
ஊற்றென்பதூன்றுகோலு முறவியுமிடிப்பேபோதும்
தோற்றமேல்பொறைதவப்பேர் நுணங்கெனபநுண்மைதேமல்.

இ-ள். கூற்றென்பது - நமன்சொல்லுக்கும்பெயர், கோமானென்பது-மூத்தோன்-பன்றிக்கும்பெயர், நாற்றமென்பது - மணத்தல்-தோன்றுதலுக்கும்பெயர், நனவென்பது - அகலம் - தெளிவுக்கும்பெயர், ஊற்றென்பது-ஊற்று-கோல்-ஊற்றுக்கும்பெயர், நோற்றலென்பது-பொறுத்தல்-தவத்துக்கும்பெயர்—எ-று. ௩௰

கற்பமேபிரமன்வாழ்நாள் கற்பகத்தருசுவர்க்கம்
பொற்பென்பதழகினோடு பொலிவுமொப்பனையுமாகும்
பற்பமேபதுமந்தூளாம பழங்கணே துன்பமோசை
யுற்கைதாரகைதீக்கொள்ளி யுண்டிதான்புசித்தல்சோறே.

இ-ள். கற்பமென்பது-பிரமதேவன்-கற்பகவிருட்சம்-தேவலோகத்திற்கும்பெயர், பொற்பென்பது-அழகு - பொலிவு-அலங்காரத்திற்கும்பெயர், பற்பம்-என்பது-தாமரை - துகளுக்கும்பெயர், பழக்கணென்பது-துன்பம்-ஒலிக்கும்பெயர், உற்கையென்பது, வான்மீன் - சண்டக்கொள்ளிக்கும்பெயர், உண்டிஎன்பது-உண்டல் - சோற்றுக்கும்பெயர்.

முற்றல்காழ்க்கோடன்முப்பு முதிவுடன்வளைத்தனற்பேர்
நெற்றியேநுதலின்பேரு நெடும்படைவகுப்புமாகுங்
கொற்றமேவன்மைவெற்றி கோவியன்முப்பேரோதும்
ஏற்றுதல்புடைத்தலோடே யெரிதலுமிருபேராமே.

இ-ள். முற்றலென்பது-வயிரங்கொள்ளல் - முதுமை-முற்றுதல்-வளைத்தலுக்கும்பெயர், நெற்றியென்பது-நெற்றிவடை-வகுப்புக்கும்பெயர், கொற்றமென்பது-வலிமை-விசயம்-அரசியலுக்கும்பெயர், ஏற்றுதலென்பது- அடித்தல்-எறிதலுக்கும்பெயர்-எ-று. ௩௨

அறுகென்பசிங்கமேபுல் யாளியுமாகுமப்பேர்
வறிதென்பகருதலேசற் றறியாமைபயனில்வார்த்தை
மறலியேமயக்கங்கூற்று மறலிகண்மறதியீனங்
குறளென்பகுறளும்பேயுங் குறுமையுங்கூறுமுப்பேர்.

இ-ள். அறுகென்பது-சிங்கம-ஓர்வகைப்புல்-காளிக்கும்பெயர், வறிதென்பது-குறைதல் சிறுமை-அறியாமை - பயனிலாமொழிக்கும்பெயர், மறலியென்பது-மயக்கம் - இயமனுக்கும்பெயர், மறலியென்பது-கள்மறதி-இருவுக்கும்பெயர், குறளென்பது-குள்ளம் - பிசாசம் சிறுமைக்கும்பெயர்-எ-று. ௩௩

விறலென்பதவிவென்றிப்பேர் விழைந்தோனேநண்பன்வேட்டோ
னொறிலென்பவிறைவினோடு நுடங்கமுமிருபேராமே
நெறிவருநீதியென்ப திருமித்தல்படைப்பாராய்தல்
பறைபறைவசனத்தோடு பறப்புக்கும்புள்ளிற்குமுப்பேர்.

இ-ள். விறலென்பது-வல்லமை - வெற்றிக்கும்பெயர், விழைந்தோனென்பது-சினேகிதன்-கணவனுக்கும்பெயர், ஒறிலென்பது, சீக்கிரம் - நுடக்கத்துக்கும்பெயர், நெறியென்பது - வழி-நியாயத்திற்கும்

பெயர், நிருமித்தலென்பது சிருஷ்டித்தல் ஆராய்தலுக்கும்பெயர், பறையென்பது வாச்சியம் சொல் பறவையினிறகுக்கும்பெயர்-எ-று.

நகரவெதுகை-முற்றிற்று.

ஆக-வெதுகை-கஎ-க்கு-கூடியசெய்யுள்-உாகூ.

ணகரவெதுகை.

மணவென்பமணிசங்கக்காம் வரைமலையிறைவேய்மட்டாம்
மணிதமியொப்பின்மைப்பேர் சாந்தமேகமையுஞ்சாந்து
முனைபகைநுனிவெறுப்பா முனைதேயக்குரமேபிள்ளை
இளையென்பகிளையமைச்சர் மெழில்வண்ணமிளமைக்கும்பேர்.

இ-ள். மணமென்பது மணிப்பொழுது சங்குமணிக்கும்பெயர், வரையென்பது மலைகையிறை மூங்கில் அளவுக்கும்பெயர், தனியென்பது தணி ஒப்பின்மைக்கும்பெயர், சாந்தமென்பது பொறுமை சந்தனத்திற்கும்பெயர், மூனையென்பது பகை நுனிவெறுப்புக்கும்பெயர், எழிலென்பது அழகு இளமைக்கும்பெயர்-எ-று. க

ஆனகம்பட்டத்தின்பே ராகுதுந்துமியுமப்பேர்
மானமேயளவிலச்சை விமானமேபெருமைகுற்றம்
பானமேபழனநெய்தல் பகங்கரேயிடம்பக்கப்பேர்
பானலேமயக்கமொப்பாம் வருடமேமழையுமாண்டும்.

இ-ள். ஆனகமென்பது தம்பட்டம் பேரிகைக்கும் பெயர், மானமென்பது அளவு வெட்கம் விமானம் பெருமை குற்றத்திற்கும்பெயர், பானலென்பது வயல் நெய்தலுக்கும்பெயர், பாங்கரென்பது இடப்பக்கத்திற்கும்பெயர், வானலென்பது மயக்கம் ஒப்புக்கும்பெயர், வருடமென்பது மழை வருடத்திற்கும்பெயர்-எ-று. உ

தானமேமதநீராட்டுத் தருகொடைசுவற்காற்பேர்
பீனமேபருமைபாசி பேடென்பபேடியூரே
நானமேபூசும்பூச்சு நாணமுங்குளிக்குநீரும்
வானமாகாயமென்ப மழையுலர்மரமுமாமே.

இ-ள். தானமென்பது யானைமதம் நீராடல் கொடுத்தல் தேவலோகத்திற்கும்பெயர், பீனமென்பது பருமை பாசிக்கும்பெயர், பேடென்பது அலி ஊருக்கும்பெயர், நானமென்பது பூசும் பூச்சு கஸ்தூரி குளிக்கும்பெயர், வானமென்பது ஆகாயம் மழை உலர்ந்தமரத்திற்கும்பெயர்-எ-று. ஈ

வாணிமேற்கட்டிதேனே வண்டுகிற்கொடிமுப்பேரே
யாளியேமூலநாளுஞ் சேதமுமாகமென்ப

வேணையேயொழியுமற்றை யெனுமிடைச்சொற்குமப்பே
யாணியாம்பொழுதுநாளா மனந்தையோர்சத்திபூமி.

இ-ள். வாணியென்பது மேற்கட்டு சேனை துகிற்கொடிக்கும்பெயர், ஆணியென்பது மூலநட்சத்திரம் கேட்டிற்கும்பெயர், ஏனையென்பது ஒழிவுமற்றையெனு மிடைச்சொல்லுக்கும்பெயர், ஆணியமென்பது காலம் நாளுக்கும்பெயர், அனந்தையென்பது ஓர்சத்திபூமிக்கும் பெயர்-எ-று. ச

முன்னலேநினைவுநெஞ்சா முன்னஞ்சீக்கிரியோடெண்ணங்
கன்னல்சர்க்கரைகரும்பு காரகநாழிகைவட்டிற்பேர்
மன்னவுத்திரட்டாதிப்பேர் மன்னவன்றனுமாகும்
இன்னரநீர்ப்புள்யாழாங் கிடக்கைபூதலம்பாயற்பேர்.

இ-ள். முன்னலென்பது நினைப்பு நெஞ்சுக்கும்பெயர், முன்னமென்பது சீக்கிரிமரம் கருத்துக்கும்பெயர், கன்னலென்பது சர்க்கரை கரும்பு காரகநாழிகை வட்டிலுக்கும்பெயர், மன்னவென்பது உத்திரட்டாதி நட்சத்திரம் அரசனுக்கும்பெயர், இன்னரமென்பது நீர்வாழ்பறவை வீணைக்கும்பெயர் கிடக்கையென்பது பூமிமக்கட்படுக்கைக்கும்பெயர்-எ-று. ரு

பின்னையேபின்றைதங்கை பெரியமாற்குரியதேவி
கொன்பயனிலாமைகாலங் கூறியபெருமையச்சம்
பொன்னென்பவனப்பிரும்பு பூமகள்வியாழநாற்பேர்
மன்னிலைமிகுதிவேந்த வாழிவாழ்கெனவிடைச்சொல்.

இ-ள். பின்னையென்பது பின்பு இளையவன் திருமகளுக்கும்பெயர், கொன்னென்பது பயனின்மை பொழுது பெருமை பயத்திற்கும் பெயர், பொன்னென்பது அழகு இரும்பு இலக்குமிபிரகாபதிக்கும் பெயர், மன்னென்பது நிலை மிகு அரசனுக்கும்பெயர், வாழியென்பது வாழ்கெனல் இடைச்சொல்லுக்கும்பெயர்-எ-று. சு

வன்னியேபிரமசாரி வளர்கிளிசமிசெந்தீயாஞ்
சென்னிசம்பாணனசோழன் சீருளியஞ்செம்பாகுங்
கன்னிபெண்ணழிவிலாமை கட்டிளமைக்கும்பேரே
தென்னிசைவனப்புத்தாழை தெற்கொடுகற்புமாமே.

இ-ள். வன்னியென்பது பிரமசாரி கிளி வன்னிமரம் நெருப்புக்கும்பெயர், சென்னியென்பது தலை இசை பாடுவோன் சோழனுக்கும் பெயர், சீருளென்பது ஈயம்புக்கும்பெயர், கன்னியென்பது பெண் அழிவின்மைகட்டிளமைக்கும்பெயர், தென்னென்பது, இசை அழகு தென்னமரம் தெற்கு கற்புக்கும்பெயர்எ-று. எ

குன்றுதேதெண்ட மாகுங் குறைவொடுசதயமும்பே
ரன்றிலோர்புள்ளுமூல நாளெனவாமிரண்ட
மன்றலேவெளியிறுமம் வாசமும்பலமுவப்பேர்
மன்றலேபரிமளப்பேர் மருவுகல்யாணமும்பேர்.

இ-ள். குன்றெனபது, குறைதல் சுயநட்சத்திரத்திற்கும்பெயர், அன்றிலென்பது, ஓர்பறவை மூலநட்சத்திரத்திற்கும்பெயர், மன்றமென்பது, வெளிவாசனை சபைக்கும்பெயர், மன்றலென்பது, வாசனை விவாகத்திற்கும்பெயர்—எ-று. ௮

தனமுலைபொன்னான்கன்று சந்தமுத்தன்மைப்பேராங்
கனவுநித்திரைமையற்பேர் கலிங்கஞ்சாதகப்புள்ளாடை
கனைசெறிவொலியமென்ப கவரியேசவரிமேதி
பனுவலேளகிளவிநூலாம் படப்பையூர்ப்புறமேதோட்டம்.

இ-ள். தனமென்பது, முலை பொன் பசுவின்கன்று சந்தனம் பசு முதலிய முப்பொருட்கும்பெயர், கனவென்பது, நித்திரை மயக்கத்திற்கும்பெயர், கலிங்கமென்பது, வானம்பாடி சீலைக்கும்பெயர், கனையென்பது, நெருக்கம்-ஓசைக்கும்பெயர், கவரியென்பது, சாமரம் எருமைக்கும்பெயர், பனுவலென்பது, சொல் நூலுக்கும்பெயர், படைப்பையென்பது, நாட்டிற்புறம் தோட்டத்திற்கும்பெயர்-எ-று. ௯

அனந்தசிவன்மால்சேட னலாயுதனருகனெந்தே
யனந்தமேமுடிவிலாமை யாடகம்விண்முப்பேரே
யனங்கனேஇருவாட்சிப்பே ராகுமல்லிகைக்கும்பேரே
தனஞ்செயன்பார்த்தனெசெந் தழலொருகாற்றுமாமே.

இ-ள். அனந்தனென்பது, சிவன் திருமால் பூமிதாங்கும்பாம்பும்பலபத்திரன் அருகனுக்கும்பெயர், அனந்தமென்பது, அளவின்மைபொன் ஆகாயத்துக்கும்பெயர், அனங்கமென்பது, இருவாட்சி மல்லிகைக்கும்பெயர், தனஞ்சயனென்பது, அருச்சுனன்-நெருப்பு தசவாயுவிலொன்றுக்கும்பெயர்—எ-று. ௰

இதற்குமேற்கோள்.

அனந்தனேசிவன்மாயனருகனனந்தனொடு பலதேவனைப்பேரே
அனந்தமென்பது முடிவிலாமையும் விண்ணொடுபொன்னும் விதிக்கு
முப்பெயரே அனகமல்லிகைமிருவாட்சியுமாம் தனஞ்செயனென்ப
தோர் காற்றுந்தீயு மருச்சுனனெனவு மறைவுமுப்பேரே.

சானகிசீதைமூங்கி றனுவென்பதுடல்வில்லற்பஞ்
சானுவேமலைமுழந்தாண் மலைப்பக்கந்தானுமாகுஞ்
சோனையேயோணநாளும் விடாமழைசொரிதலும்பேர்
கானலேமலைச்சார்சோலை கடற்கரைச்சோலைபெய்த்தேர்.

இ-ள் சானகியென்பது, சீதைமூங்கிலுக்கும்பெயர், தனுவென்பது, உடம்பு வில் சிறுமைக்கும்பெயர், சானுவென்பது, மலை முழந்தாள்விடாதுபெய்மழைக்கும்பெயர், கானலென்பது, மலைச்சார் சோலை கடற்கரைச்சோலை-கானலுக்கும்பெயர்-எ-று. ௰௧

இதற்குமேற்கோள்.

சாணகிசிலைதையுமுங்கிலுமாகும் தனுவேவில்லுமுடலுமோசையு நுட்பமுமெனவே நுவலுநாற்பெயரே, சாணுமலையு மலையின்சாரலு முழந்தாளெனவு மொழியுமுப்பெயரே, சோலையென்பது, விடாது பெய்மழையுந்திருவோணமெனச்செப்புமிருபெயர், கானலேயாதித்த கிரணமுமலைச்சாரலிற், கடற்கரையிற்சோலையும் பேய்த்தேருடனுப் பளமுமைம்பெயரே.

வாளென்பவிசும்புமேக மழைசொடுபெருமைநாற்பேர்
தானையேசேனையாட படைக்கலந்தானுமாகும்
கானந்தேரிசையேபேதை காடுகற்பாடியைம்பே
ரேனலேசெந்தினைப்பேர் தினைப்புனமொன்றுமாமே.

இ-ள். வானென்பது, ஆகாயம் மேகம்மழை பெருமைக்கும்பெயர், தானையென்பது, சேனைவஸ்திரம் ஆயுதப்பொதுவிற்கும்பெயர், கானமென்பது, தேர் இடம் அறிவிலி காடு வானம்பாடிற்கும்பெயர், ஏனலென்பது, செந்தினை தினைப்புனத்திற்கும்பெயர்-எ-று. யஉ

இதற்குமேற்கோள்.

வானேபெருமையு மழையும்புயலும் விண்ணும்முகமுமேவுமை ம்பெயரே, தானையேபொருபடையுந்தூசுமாயுத மெனவுமறையுமுப் பெயரே, கானமென்பதுவேயிசையும்வானம்பாடியும் பேதையுந்தே ருமென்றைம்பேர் ஏனல்செந்தினையும் பைந்தினையும் தினைப்புனமு மென்றே போற்றுமுப்பெயரே.

முனிஎன்பதியானைக்கன்று முனிவன்வில்கைத்திநாற்பேர்
துனியென்பபுலவிநீட்டந் துன்பநோயாதுகோபம்
பனிஎன்பநடுக்கந்துன்பம் பயங்குளிரிம்மைப்பேரே
சினைஎன்பமுட்டைமீளா மரக்கொம்புஞ்செப்புமப்பேர்.

இ-ள். முனிஎன்பது யானைக்கன்று தவத்தோன் வில் அத்தத்திற் கும்பெயர், துனியென்பது, புலவிநீட்டம் துன்பம் வியாதி நதிகோப த்துக்கும்பெயர், பனியென்பது, நடுக்கம் துன்பம் வியாதி அச்சி ப னிக்கும்பெயர், சினை என்பது முட்டை கர்ப்பம் மரக்கொம்புக்கும் பெயர்-எ-று. யங

இதற்குமேற்கோள்.

முனியேயிருடியும்யானைக்கன்றும் வில்லுமகத்தியுமேவுநாற்பெ யரே, துனியேதுன்பமுன்புலவீட்டங்கோபமு நோயுங்குடிசையுமை ப்பேர், பனியேவிம்முங்குளிருவச்சமுந்துன்பமுநடுக்கமுஞ்சொல்லா கும், சினையேமுட்டையும் பீளுமுறுப்பு மரக்கோடெனவும் வைக்கு நாற்பெயரே.

மானேசாரங்கமாவின் பொதுவொடுமகரராசி
கானேநண்மணங்கடென்ப கல்வியூர்க்குருவியாமை

யேனதிமஞ்சிகன்மந் திரியுந்தந்திரியுமென்ப
மீனேசித்திரைநாள்வான்மீன் மாலையுமேவுமப்பேர்.

இ-ள். மானென்பது, மான்விலங்கின்பொது மகாராசிக்கும்பெயர், கானென்பது, வாசனைகாட்டிற்கும்பெயர், கவ்வியென்பது, ஊர்க்குருவி ஆமைக்கும்பெயர், ஏனதியென்பது, நாவிதன் மந்திபடைத்தலைவனுக்கும்பெயர், மீனென்பது, சித்திரை நட்சத்திரம் விண்மீன் மீனுக்கும்பெயர்—எ-று. ௧௪

இதற்குமேற்கோள்.

மானேயுழையுமகராசியும்விலங்கின் பொதுவும்விளம்பலாகும், கானேகாடுமணமுமிருபெயர், கல்யூர்க்குருவியுங்கபாடமாகும், மீனே விண்மீன்சித்திரைநாளொடு, மீனுமெனவேவினம்புமுப்பேரே.

ஞானமேயறிவுகல்வி நல்லதத்துவநூன்முப்பேர்
யானமேமரக்கலத்தோ டொழிலூர்திவிகற்பிரண்டா
யேனமோலைக்குடைம்பே ரெருழியுமறமுமப்பேர்
மேனியேமடிவமென்ன நிறத்தையும்விளம்பலாமே.

இ-ள். ஞானமென்பது, அறிவு வித்தை ஞான நூலுக்கும்பெயர், யானமென்பது, நாவாய் வாகனவிகற்பத்துக்கும்பெயர், ஏனமென்பது, ஓலைக்குடை நன்றி பர்வதத்திற்கும்பெயர், மேனியென்பது, உருவம் காந்திக்கும்பெயர்—எ-று. ௧௫

இதற்குமேற்கோள்.

ஞானந்தானேயறிவுங்கல்வியுந் தத்துவநூலுஞ்சாற்றுமுப்பெயரே, யான்மறைவீடுமூர்தியுந்தோணியும் ஏனந்தானே பன்றியும்பாவமுமோலைக்குடையுமென்றேதுமுப்பேரேமேனியுடம்புநிறமுமாகும்

அன்னையேமுன்பிறந்தா டோழிதாயாகுமென்ப
அன்னமோதிரமமேசோறு மாகாரமுடனெய்யுண்டி
தன்மையோரியல்பினோடு தன்மையினிடமுஞ்சாற்றும்
பண்ணலேநெக்கம்வார்த்தை பருத்தியின்மேருமாமே.

இ-ள். அன்னையென்பது, அக்காள் தோழிதாய்க்கும்பெயர், அன்னமென்பது, அன்னப்புள் சோற்றுக்கும்பெயர், ஆகாரமென்பது, உடம்பு நெய் உணவுக்கும்பெயர், தமையென்பது, அழகு குணம்தன்மையிடத்திற்கும்பெயர், பன்னலென்பது, நெருக்கம் சொல்பருத்திக்கும்பெயர்—எ-று. ௧௬

இதற்குமேற்கோள்.

அன்னைதானேதாயுந்தோழியு முன்பிறந்தாளுமொழியு முப்பெயரே, அன்னமோர்புள்ளுஞ்சோறுமிருபெயர், ஆகாரமென்பதூணும் வடிவுநெய்யுமெனவே நிகழ்த்துமுப்பெயரே தன்மைஎன்பதோ ரிட

Vijayaringasamy

Book

Sappanikovil

Madura District

மதுரை சப்பாணி கோவிலு

க்கு எதுத்த ஸ்ரீரங்கசமு

த்த கோவிலில் இருக்கும்

விஜயரங்கசாமி

மகன் இராஜபுத்திரம்

மலையரசன் புரம் [illegible]